# அலகு 2

## பாடம் 4

# இந்திய இதழியல் வரலாறு

அச்சுக்கலையின் வளர்ச்சியில்தான் இந்திய இதழியலின் வளர்ச்சி அமைந்தது. 1498 ஆம் ஆண்டில் வாஸ்கோடகாமாவின் வருகைக்குப் பின்னர் போர்ச்சுகீசியப் பாதிரியார்கள் இந்தியாவில் அச்சுக்கலையை அறிமுகப்படுத்தினர். 1556 ஆம் ஆண்டு செப்டம்பர் 6இல் இந்தியாவின் முதல் அச்சகம் கோவாவில் அமைந்தது. 1557 இல் டக்ட்ரினா கிறிஸ்டம் என்ற நூல் முதலில் அச்சாகியது. பின்னர் 1578ல் இந்நூல் தம்பிரான் வணக்கம் என்ற பெயரில் தமிழில் அச்சாகியது. இந்திய மொழிகளில் முதல் நூல இந்த நூலே ஆகும்.

அச்சுக்கலை வளர்ச்சியில் முதலில் ஜெர்மனும், பிரான்ஸும், ஸ்விடனும் பின்னர் இங்கிலாந்தும் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தன. அப்போது இங்கிலாந்திலிருந்து வந்து இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த வெள்ளையர்கள் மற்றும் இந்தியாவில் இருந்த ஐரோப்பியர்கள் இங்கிலாந்திலிருந்து வருகின்ற செய்தித்தாள்களையே நம்பி இருந்தனர். அப்போது ஆங்கில அரசின் தலைமையிடமாக விளங்கிய கல்கத்தா நகரில் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய வில்லியம் போல்ட்ஸ் என்பவர் 1766 ஆம் ஆண்டில் இதழ் ஒன்றைத் தொடங்க முயற்சித்தார். கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு அம்முயற்சி பிடிக்காமல் போகவே அவரைப் பணி நீக்கம் செய்தனர். அவர் முயற்சியையும் தடை செய்தனர். அப்பொழுது அவர் தலைமைச் செயலகக் கதவில் பின்வரும் அறிக்கையினை ஒட்டினார்.

> கல்கத்தா நகரில் செய்தித்தாள் இல்லாதது வணிகத்திற்கும் சமுதாயத்திற்கும் பெரிய இழப்பாக இருக்கிறது. ஒவ்வொரு இந்தியனுக்கும் அது வேண்டிய ஒன்றாகும். எனவே அச்சுத் தொழில் அறிந்தவர்களுக்கு அச்சகத்தை நடத்துகிறவர் களுக்கும் ஊக்கமளிக்க நான் தயாராக இருக்கிறேன். பொது மக்களுக்குச் செய்தியாகச் சொல்லவேண்டிய எழுத்துப்படி களை வைத்திருப்பவர்கள் காலை பத்திலிருந்து பன்னிரண்டு மணிக்குள் என்னை வந்து சந்திக்கலாம்.

இதைத் தொடர்ந்து வில்லியம் போல்ட்ஸ் ஐரோப்பாவிற்கு செல்ல வேண்டுமென்று கிழக்கிந்தியக் கம்பெனியாரால் உத்தரவிடப்பட்டார். இ

...கழ்ச்சி நடைபெற்று ஏறக்குறைய 14 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இந்தியாவின் முதல் செய்தித்தாளாகிய பெங்கால் கெஜட், அல்லது கல்கத்தா ஜெனரல் அட்வர்டைசர் என்ற செய்தித்தாள் 1780 இல் ஜனவரி 29 ஆம் நாள் வெளியிடப்பட்டது.

## ஆரம்ப கால இதழ்கள்

ஆரம்ப காலங்களில் 1780 இல் பெங்கால் கெஜட் அல்லது கல்கத்தா அட்வர்டைசர் என்ற இந்த நாளிதழைக் கொண்டுவந்தவர் அச்சுக்கலையில் ஆர்வம் கொண்ட ஆங்கிலேய வணிகர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் ஆவார். இரண்டு பக்கங்களைக் கொண்டதாய் வெளி வந்தது இவ்விதழ். இந்திய இதழியலின் வளர்ச்சிக்கு வித்து இந்த இதழ்தான் எனில் அது மிகவும் சரியே. இங்கிலாந்து இதழ்களில் வெளிவந்த செய்திகளைத் தனது இவ்விதழில் வெளியிட்டார் ஹிக்கி. அவைதவிர வணிகக் கடிதங்கள், விளம்பரங்கள் போன்றவற்றையும் தம் இதழ்களுக்குச் செய்திகளாகத் தெரிவு செய்தார். செய்தியின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை இந்தியமக்களுக்குப் பெரிதும் உதவவில்லை என்றாலும் முதல் இதழ் என்ற பெருமையைத் தக்க வைத்துக் கொண்டது. ஹிக்கி மன உறுதியுடன் ஆங்கில அரசை எதிர்த்துப் போராடினார். ஆங்கில அரசின் மற்றும் அதிகாரிகளின் முறையற்ற செயல்களைத் தம் இதழில் கண்டித்து எழுதினார். எனவே அதிகாரிகளின் பகையை இவ்விதழ் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. இங்கிலாந்தில் வெளியான செய்திகள் எதிர்க்கட்சியினரால் எடுத்துச் சொல்லப்பட்டதன் விளைவாக இவ்விதழின் அஞ்சல் வழியாக அனுப்பும் சலுகையை நீக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்துடன் எண்பதாயிரம் ரூபாய் அபராதமும் நான்கு மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. சிறைக்குள் இருந்து கொண்டே தொடர்ந்து தன் இதழை வெளியிட்டார் ஹிக்கி. 1782இல் இவர் அச்சகம் பறிமுதல் செய்யப்பட்டு மூடப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் இவ்விதழ் நின்றுவிட்டாலும் இந்தியச் செய்தித் தாள்களின் தந்தை என்ற தகுதியை ஹிக்கி பெறுகிறார்.

பெங்கால் கெஜட்டைத் தொடர்ந்து இந்தியா கெஜட் என்ற இதழ் தோன்றியது. பொனாரடு பெஸ்ஸிங், பிட்டர் ரீட் என்ற இருவணிகர்கள் தங்கள் வணிகத்தை விளம்பரம் படுத்தி விரிவுபடுத்த எண்ணி இவ்விதழைத் தொடங்கினர். பின்னர் இந்த இதழ் நாளிதழாக மாறியது. அப்போதைய தலைமை ஆளுநர் வாரன்ஹேஸ்டிங்ஸ் விதித்திருந்த கட்டுப்பாட்டை மீறுவதில்லை என இவ்விதழ் ...துக்கொண்டது. இவ்விதழுக்கு மானியம் கிடைப்பதற்கு ஆளுநரின் மனைவி பரிந்துரை செய்தார்.

இந்தியாவின் மூன்றாவது இதழான கல்கத்தா கெஜட் அன்டு ஓரியன்ட
வடைசர் 1784 இல் அரசினரின் செய்திகளை வெளியிடும் இதழ
ளிவந்தது. 1785 இல் பெங்கால் ஜெர்னல் என்ற இதழ் தாமஸ் ஜோன்ஸ் என்ற
ஙிகரால் தொடங்கப்பட்டது, ஆங்கில அரசின் விளம்பரங்களை இலவசமாக
ளியிட்டது. இந்த ஆண்டிலேயே இந்தியாவின் முதல் மாத இதழ் ஓரியன்ட
கலின் அல்லது கல்கத்தா அம்யூஸ்மென்ட் என்ற பெயரில் ஆரம்பமாயிற்று
5 இல் கல்கத்தா கிரானிக்கிள் வெளியாயிற்று. இதுவரை சுட்டப்பட்ட இதழ்கள்
னைத்தும் ஆங்கில அரசின் தலைமையிடமாக விளங்கிய கல்கத்தாவிலிருந்து
ளி வந்தவையே.

சென்னையில் முதல் செய்தித்தாளை ரிச்சர்டு ஜான்ஸ்டன் என்னும்
ச்சகர் மெட்ராஸ் கூரியர் என்ற பெயரில் 1785 இல் தொடங்கினார். நான்கு
ங்கள் உடையதாய் வெளியானது இவ்விதழ், தொடக்ககாலத்தில் ஆங்கில
சுக்கு ஆதரவாக இருந்தது இவ்விதழ். பின்னாளில் இதன் ஆசிரியர்
க்பாய்டு அதிலிருந்து விலகி 1791 இல் ஹூரகாரு என்ற இதழை
டங்கினார். 1795இல் வெளிவந்த வீக்லி மெட்ராஸ் கெஜட் என்ற இத
ராஸ் கூரியருக்கும் போட்டி இதழாக அமைந்திருந்தது.

பம்பாயில் முதல் ஆங்கில வார இதழாக 1789 இல் பாம்பே ஹெரால்
ற இதழ் வெளிவந்தது. 1838 இல் பாம்பே டைம்ஸ் என்ற பத்திரிகை வெ
து. இப்பத்திரிகை பாம்பே கூரியர் என்ற பெயரில் முதலில் வெளிவந்
ண்டிருந்து பின்னர் பாம்பே டைம்ஸ் என்று பெயர் மாற்றம் பெற்றது. இந்
பே டைம்ஸ்தான் இன்று இந்தியாவின் முன்னணிச் செய்தித்தாள
ங்கும் டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆகும். கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய
டங்களிலும் இதழ்கள் தோற்றம் கண்டன. இவை சீராக வளர்ச்சி பெறா
யில் அரசின் நெருக்கடி அமைந்தது. வெல்லெஸ்லி பிரபுவின் காலத்தி
த்தா இதழ்கள் கடுமையான சட்டங்களைச் சந்தித்தன. 1799 இல் வெளியா
ய்தித்தான் தணிக்கை ஆணையின் படி வெளியிடுவதற்கு முன்பு எல்லா
திகளையும் அரசினரின் பார்வைக்கு அனுப்ப வேண்டியதிருந்தது. 1799 இ
ழ்கள் ஒழுங்குமுறைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் இதழ்களி
த்துச் சுதந்திரத்திற்குத் தடை போட்டது. எனவே ஆங்கிலேயர் கா
இதழ்கள் இந்தியர்களுக்காக நடத்தப்படாமல் இந்தியாவில் தங்கியிருக்கு
ரோப்பியருக்காக ஐரோப்பியர் நடத்தும் இதழ்களாகவே அமைந்தன.

## ...லைக்குப் பின்பு இந்திய இதழ்கள்

இந்திய நாட்டு விடுதலைக்குப் பின்னர் இதழ்கள் கருத்துச் சுதந்திர... ...வை ஆயின. தொடர்ந்து மக்கள் கருத்துக்கள் இதழ்களாக உருவாக... ...ர். விடுதலைக்குப் பின்னர் இலக்கியம், அறிவியல், சமுதாய முன்னேற்ற... ...ற உள்ளடக்கங்களும் அரசியலோடு இணைந்து இதழ்களில் காண... ...ன. ஒரே நிறுவனத்திலிருந்து பல்வேறு இதழ்கள் தொடங்கப்பட்டன. 1948 ஜன... ...ரி 31 இல் காந்தியாரின் மறைவை இந்திய இதழ்கள் கண்ணீருடன் ...யிட்டன. மாலைச் செய்தித்தாளான மெட்ராஸ் மெயில்தான் இந்த... ...யை முதலில் வெளியிட்டது.

1949 இல் இராய்டரின் ஒப்பந்தத்துடன் இந்தியாவின் மிகப் பெரிய செய்தி ...வனமான பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா (PTI) தொடங்கப்பட்டது. செய்திகள் ...ால் விரைவாகப் பெறப்பட்டன. 1950 இல் ஜனவரி 26 இல் இந்தியா மிகப் ...ய குடியாட்சி நாடாக மறுமலர்ச்சி பெற்றபோது இயற்றப்பட்ட இந்திய ...யல் அமைப்புச் சட்டத்தின் 13,19 ஆம் பிரிவுகள் இதழ்களின் சுதந்திரத்திற்குப் ...காப்பு அளிப்பதாக அமைந்திருந்தன. 1952 இல் இதழ்கள் பற்றிய ...ரணைக்குழு (Press Commission of India) தோற்றுவிக்கப்பட்டது. இக்குழு... ஆலோசனைப்படி பத்திரிகையாளர்கள் ஊதிய நிர்ணயம், செய்தித்தாள் ...ாளர் அலுவலகம் முதலியன ஏற்படுத்தப்பட்டன. இந்தியாவின் முதல் ...தல் 1952 ல் தொடங்கியபோது இதழ்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டன. ...தல் முடிவுகள் விரைவாய் பத்திரிகைகளில் வெளியாயின.

1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள் இரவு 11.45 மணிக்கு ...டின் நெருக்கடி நிலைச் சட்டம் (Maintenance of International Security Act) ...ற மிசா சட்டம் கொண்டுவரப் பட்டது. இந்திராகாந்தி பிரதமராக இருந்த ...த்தில் கொண்டுவரப்பட்ட இச்சட்டம் இதழ்களைக் கண்காணித்தது. ...ழ்களின் மீது இச்சட்டம் ஏவி விடப்பட்டு எண்ணற்ற இன்னல்கள் விளைவிக்கப் ...டன. இதழ்கள் தணிக்கை முறை அமுலுக்கு வந்தது. எல்லாச் செய்திகளும் ...தணிக்கைக்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. ...ழ் அலுவலகங்களை மத்திய புலனாய்வுத்துறையினர் கண்காணித்தனர். ...ழ்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சில இதழ்கள் தடை செய்யப்பட்டன. இந்திய ...ழியல் வரலாற்றில் ... ஒரு கரும்புள்ளியாகவே அமைந்தன.

## இந்திய மொழியில் இதழ்கள்

இந்திய இதழியலுக்கு வித்து ஊன்றிய இடம் வங்காளம். வங்காளத்தி அருகில் உள்ள செராம்பூரிலிருந்த சமாச்சார் தர்பன் (1818) வெளிவந் இராசாராம் மோகன்ராய் தொடங்கிய சம்பாத் கௌமுதி (1821) இங்கிரு வெளிவந்தது. இந்தியாவின் தலைசிறந்த ஆங்கிலச் செய்தித்தாளாக விளங் அமிர்த பஜார் பத்திரிக்கா (1872) இல் வங்க மொழியில் தொடங்கப்பட் பாலக்பந்து சிறுவர் இதழாக இரவீந்திரநாத் தாகூரால் 1890 இல் வங்காளத் மலர்ந்தது. 1879 இல் வங்க மொழியில் புரட்சி இதழாக சுரேந்திரநாத் பானர்ஜி பெங்காலி என்ற இதழ் வெளிவந்தது. வந்தேமாதரம் (1906) இதழ் இம்மொழி தேசிய உணர்வூட்டியது.

மும்பாய்-னா-சமாச்சார் (1822), பம்பாய் சமாச்சார் (1932), நவஜீ ஹரிஜனபந்து (1932), ஜன்மபூமி (1943) போன்ற குஜராத்தி மொழி இதழ் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

ஜெர்மானிய நாட்டுக் கிறிஸ்துவ இயக்கத்தார் பெல்லாரியில் ஆரம்பி கன்னடசமாச்சார் (1812) முதல் கன்னட இதழாகும். கன்னட மொழியில் மு மாத இதழ் ஹிட்டா போதினி (1881) மைசூரிலிருந்து வெளிவந்தது. அதன தொடர்ந்து சில மாத இதழ்கள் வெளிவந்தன. கன்னடத்தின் முதல் நாளி சூர்யோதய பிரகாசிகா (1888) ஆகும். மைசூர் மக்களால் பெரிதும் மதிக்கப் 'தாத்தையா' என்று அழைக்கப்பட்டவரான வெங்கடகிருஷ்ணய்யா கன்னடஇ இதழ்களின் தந்தை என்று போற்றுவதற்கு உரியவராகிறார். கன்னடஇ வளர்ச்சிக்கு மிகுதியும் உதாரணமாக இருந்தவர் ஆவார்.

பெல்லாரிக் கிருத்துவக் கழகத்தார் சத்தியநாதன் (1835) என்ற இதழைத் தெலுங்கில் வெளியிட்டனர். இதுவே தெலுங்கிற்கு முதல் மாத இ 1861 இல் வெளிவந்தது தினவர்த்தமானி என்ற வார இதழ். 1955 இல் ஆந் பிரிவினைக்குப் பின் ஆந்திர் ஜனதா, விசால ஆந்திரா, இராஜமுந்திரி சமாச்ச ஆந்திர பூமி, ஆந்திர ஜோதி ஆகிய இதழ்கள் தெலுங்கில் செல்வாக் பெற்றிருந்தவை ஆகும்.

மலையாள மொழியின் முதல் செய்தித்தாள் 1840 இல் வெளிவந் கோட்டயத்திலிருந்து வெளியான இவ்விதழின் பெயர் விக்ஞான நிக்ஷேபம், இல் கோழிக்கோட்டிலிருந்து கேரள சஞ்சாரி, மனோரமா ஆகிய இதழ்கள் வந் மலையாள மொழியில் மிகவும் பிரபலமான மலையாள மனோரமா (1 நாளிதழ் மாப்பிள்ளை வாகிஸால் தொடங்கப்பட்டது. தேசிய விடுதலை போராட்டத்தில் கேரள கேசரி தீவிரமாகப் பங்கேற்றது. விடுதலை உணர்

ய மலையாள இதழ்களுள் குறிப்பிடத் தக்கது மாத்ரு பூமி(1923) ஆகும். யுகம், தீபிகா, தினப்பிரபா ஆகியவை மலையாள மொழியில் புகழ் பெற்ற இதழ். இந்திய செய்தித்தாள் வரிசையில் மலையாள மனோரமா வார இதழ் ம் சாதனையைப் பெற்றுள்ளது.

## மொழி இதழ்கள்

19 ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை தமிழ் இதழ்களில் சமயமே மை இடம் பெற்றது. 1831 இல் சென்னைக் கிருத்துவ சமயப்பரப்புக் தார் தமிழ் மேகசின் என்ற இதழை வெளியிட்டனர். 1841 இல் ஜனசிநேகன் முறை இதழாக வெளிவந்தது. தினவர்த்தமானி (1855) பெர்சிவல் யாரின் பொறுப்பில் வார இதழாக செய்தி, இலக்கியம், அறிவியல் போன்ற ளைத் தாங்கி வந்தது.

தேசியம் பரப்பிய நாளிதழ் என்ற முறையில் தமிழில் முதலிடம் பெறுவது சுதேசமித்திரன் (1882) ஆகும். சாதாரண மக்களுக்கும் தேசிய உணர்வை தமிழ் நாளிதழாக இது விளங்கியது. பாரதியாரின் இந்தியா (1966) மாத தேசிய இயக்கத்தின் புரட்சி ஏடாக விளங்கியது. திரு.வி.க,வின் தேசபக்தி நவசக்தி (1920) போன்ற இதழ்கள் பல அறிஞர்கள் பணியாற்ற இடம் தன. தினமணி(1933) சதானந்தத்தால் தொடங்கப்பட்டு பின்னர் சொக்கலிங்கத்தை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்தது. ஏ.என்.சிவராமன் ரில் இவ்விதழின் அதிக அளவிலான சிறப்புக்குக் காரணமாகும் இதன் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

தமிழ் நாளிதழ்களுள், சுதேசமித்திரன், திராவிடன், தினமணி முதலில் கிரமமாக வெளிவர ஆரம்பித்தன. பிராமணர் அல்லாதார் இயக்கம் கிய பெரியார் ஈ.வெ.ரா. விடுதலை (1936) என்ற நாளிதழைத் தொடங்கி பகுத்தறிவு இயக்க இதழ் இது. பொதுவுடைமை இயக்க நாளிதழாக தி (1937) வந்தது. பாமர மக்களுக்குச் செய்தி புரியும் வண்ணம் செய்தி நாளிதழாக தினத்தந்தி (1942) மதுரையில் தோன்றியது. தினமலர் மதுரை, நெல்லை, திருச்சி, சென்னை, ஈரோடு ஆகிய இடங்களிலிருந்து கிறது. தி.மு.க.வின் கொள்கை பரப்பும் முரசொலி (1954) கலைஞர் நிதியின் முயற்சியில் அழகுற வெளிவருகிறது. நவசக்தி, மக்கள் குரல், முரசு, மாலைமலர் போன்றவையும் குறிப்பிடத் தக்கன.

பொழுது போக்கு என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழில் வருவன வார, மாத, இதழ்கள். இவ்வகையில் வாசனால் மாத இதழாக 1928 தொடங்கப்பட்ட ஆனந்த விகடன் குறிப்பிடத் தக்கது. கல்கி (1941), குமுதம்

## 19 ஆம் நூற்றாண்டில் இதழ்கள் :

1867 ஆம் ஆண்டில் கல்கத்தாவிற்கு அருகில் உள்ள செராம்பூர் என் இடத்தில் கிறித்தவர்கள் அச்சகம் ஒன்றை நிறுவிச் சமயம் பரப்பும் இதழ்களை வெளியிட்டனர். ஹேஸ்டிங்ஸ் பிரபு பதவியேற்றதும் வெல்லெஸ்லியின் இதழ்க ஒழுங்குமுறைச் சட்டத்தில் கடுமையானவற்றை நீக்கினார். இதற்குப் பின்னர்தா சொந்தமாக இதழ் தொடங்கும் என்னும் இந்தியர்களுக்கு உண்டாயிற்று.

இதழ்கள் சமுதாய விழிப்புணர்ச்சிக்குப் பயன்பட வேண்டும் என் எண்ணத்தை உண்டாக்கிய முதல் ஆங்கிலேய ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் பிர ஆவார். இச்சூழலில் 1818இல் ஜேம்ஸ் சில் பக்கிங்காம் என்ற ஆங்கிலே கல்கத்தா ஜர்னல் என்ற வார இருமுறை இதழ் ஒன்றை 1818 அக்டோபர் 2 இ தொடங்கினார். இவ்விதழில் செய்தித்தாள் அமைப்புமுறைகள் முழுமையாக பின்பற்றப்பட்டன. இவ்விதழ் இந்தியன் கெஜட், பெங்கால் ஹாரகா ஏசியாட்டிக்மிரர் போன்ற இதழ்களுடன் போட்டியிட்டு அக்காலத்திலே விற்பனையில் ஆயிரம் படிகளை எட்டிப்பார்த்தது. இவ்விதழ் மக்கள் மத்திய மிகவும் புகழ் பெற்றதாய் அமைந்தது. பத்திரிக்கை சுதந்திரம் வேண்டிய பெண்கள் உடன்கட்டை ஏறும் கொடுஞ்செயலைக் கண்டித்தும் தம் இதழி எழுதியதால் இவரை மக்களுக்கும் மிகவும் பிடித்தது.

செராம்பூர் கிறித்தவ இயக்கம் 1813 முதல் 1818 வரை வங்காள இதழிய வளர்ச்சியில் ஈடுபட்டது. 1818 இல் தீர்கதர்சன் என்ற மாத இதழை வங்கா மொழியிலும், சமாச்சார் தர்பன் என்ற வங்காளமொழி வார இதழையு வெளியிட்டனர். இதைத் தொடர்ந்து ஃபரண்ட் ஆஃப் இந்தியா மிகச் சிறந் இடத்தைப் பெற்றிருந்தது. செராம்பூர் கிறித்தவ இயக்கம் இந்தியச் சமுதாய சீர்திருத்தச் சிற்பிகளில் ஒருவரான இராஜாராம மோகன்ராயை இந்தி இதழியலில் ஈடுபடுத்தியது. இந்து சமயக் கொள்கைகளை நியாயப்படுத்து பொருட்டு பிராமணிக்கல் மேகசின், பிராமிண் சேவதி ஆகிய இதழ்களை அ வெளியிட்டார். செராம்பூர் கிறித்தவ இயக்கமும் இராஜாராம் மோகன்ராயி இந்துசமய இயக்க இதழ்களும் நடத்திக் கொண்ட சமயப் போரில் இதழியல்துற நன்கு வேகம் பெறத் தொடங்கியது. இந்நிலையில் ஆங்கில அரசின இந்தியமொழி இதழ்கள் கட்டுப்பாட்டுச் சட்டம் 1823 (vernacuar Press Act of 182 கொண்டுவரப்பட இதழ்கள் அச்சட்டத்திபடி முன்அனுமதி, தணிக்கை எச்சரிக்கைகள், கைது, சிறைச்சாலை, தண்டம், தொல்லைகள் முதலியவற்றை சந்திக்க வேண்டியதாயிற்று. இச்சட்டத்தை எதிர்த்து இராசாராம் மோகன்ராய் எதிர்ப்பு அறிக்கையை வெளியிட்டார். அது 1664-இல் வெளியிட்ட அரியோ

## ...தாம் நூற்றாண்டில் இதழ்கள்

1900 இல் இலண்டனில் இயங்கிய உலகின் தலைசிறந்த செய்தி ...மான இராய்டர் (Reuter) என்ற செய்தி நிறுவனத் தொடர்பினால் ...தாம் நூற்றாண்டில் நிறைவான வளர்ச்சி ஏற்பட்டது. பல்வேறு அரசியல் ...வர்கள் அரசியலைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். இந்திய இதழ்கள் ...ளுக்குச் சொந்தமான செய்தி நிறுவன அமைப்பைப் பற்றிச் சிந்திக்கத் ...ங்கின. இதன் விளைவாக கே.ரி. இராய் என்பவரால் 1910 இல் ...சியேட்டட் பிரஸ் ஆஃப் இந்தியா (Associated Press of India) என்ற முதல் ...யச் செய்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அன்றைய அரசியல் ...கமான இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது. திலகர் ...மையில் தீவிரவாதிகள் குழுவும், கோகலே தலைமையில் மிதவாதிகள் ...ம் செயல்பட்டன. இதன் விளைவாக இதழ்களும் பிரிந்தன. கேசரி, ...சேவக் ஆகிய இரு இதழ்கள் தீவிரவாதிகளையும், மிதவாதிகளை லீடர் என்ற ...க்கையும் ஆதரித்தன.

1910 ஆம் ஆண்டு இந்திய இதழ்கள் சட்டம் என்ற ஒரு சட்டத்தினை ...கிலேய அரசு கொண்டுவந்து இதழ்களை ஒடுக்க பல இதழ்கள் நின்று ...ன. டைம்ஸ் ஆப் இந்தியா, பாம்பே கெஜட், அட்வகேட் ஆப் இந்தியா ...ய ஆங்கிலேய இதழ்கள் ஆங்கிலேய வழிச் சென்றன. பெராஸ்ஷா மேத்தா ... இல் தொடங்கிய பாம்பே கிரானிக்கிள் மட்டும் இந்தியர்களின் குரலை ...க்கத் தொடங்கியது. இவ்விதழ் காங்கிரஸ் இயக்க ஏடாகக் கருதப் பட்டது. ...னிபெசன்டின். ஹோம்ரூல் இயக்க வெளியீடான நியூ இந்தியா, திலகரின் ...ரி, மராட்டா, மௌலானா முகம்மது அலி தொடங்கிய காம்ரேட் போன்றன ...ால இதழ்களுள் குறிப்பிடத் தக்கவை.

1915 இல் காந்தியார் தென்னைப்பிரிக்காவிலிருந்து திரும்பிய சூழல் இந்திய தேசியக் காங்கிரஸின் தலைமையை ஏற்றுக் கொண்டார். இதழி வலிமை பற்றி அவர் ஏற்கனவே தென்னாப்பிரிக்காவில் இந்தியன் ஒப்பீனிய இதழ்ப் பயிற்சி மூலம் அவர் அறிந்திருந்தார். எனவே யங் இந்தியா என்ற ஆங்கி நாளிதழையும், நவஜீவன் என்ற குஜராத்தி நாளிதழையும் தொடங்கினா இவ்விதழ்களின் வாயிலாக தேசிய உணர்வு மக்களுக்கு ஊட்டப்பட்ட மக்களிடையே விடுதலை உணர்வு பெருகியது. செய்தித்தாள் காந்திய காலத்தில் அரசியல் பரப்பும் சாதனமாக மாறியது. இந்து. முஸ்லீம் ஒற்றுமை மதுவிலக்கு, கதர் கிராம முன்னேற்றம், உழவுத் தொழில் வருவாய்ப் பெருக்க தீண்டாமை ஒழிப்பு, சுதேசியப் பொருள் ஆதரவு முதலியவையே இவர்க இதழ்களின் உள்ளடக்கமாயிற்று. இருபதாம் நூற்றாண்டு தொடங்கி ஆண்டுகளில் இந்திய இதழ்களின் வளர்ச்சி குறிப்பிடத் தக்கதாய் அமைந்தது.

## இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்கள்

1920 ஆம் ஆண்டு முதல் இந்திய விடுதலை இயக்கம் பல்வே போராட்டங்களைச் சந்தித்தது. ஒத்துழையாமை இயக்கம், சத்தியாக்கிரக அன்னியப் பொருட்கள் புறக்கணிப்பு, உப்புச் சத்தியாக்கிரகம், ரௌலட் ச எதிர்ப்பு, சைமன் குழு எதிர்ப்பு, வெள்ளையனே வெளியேறு , கிலாபத் இயக்க ஆகிய தேசியப் போராட்டங்களில் இதழ்கள் ஈடுபட்டன. ஆங்கில அரசின் மு எதிரியாக இதழ்கள் அமைந்தன. காந்தியின் அரசியல் நுழைவு, அத விளைவான அரசியல் உணர்வு, மக்களை இதழ்களோடு பிணைத்தன. மக்களி அன்றாடத் தேவைகளில் ஒன்றாய் இதழ்கள் ஆனது.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தில் மாறுதல்கள் செய்வதற்கா அமைக்கப்பட்ட சைமன் குழுவினரை மக்கள் எதிர்த்தனர். இக்கு செல்லுமிடமெல்லாம் மக்கள் அவர்களைப் புறக்கணித்தனர். போராடின இப்போராட்டங்களை இதழ்கள் எழுதின. எனவே நாடு முழுவதும் இப்போராட் பரவியது. 1919ல் ரௌலட் சட்டம் பேச்சு, எழுத்துரிமைகளைத் தடை செய்தபோதும் அச்செய்தியை கருப்புக்கோடுகளோடு சேர்த்து வெளியி இதழ்கள் எதிர்ப்புணர்வைக் காட்டின. வரலாற்றுச் சிறப்பு மிக்க தண்டியாத்திரை 1930 ஏப்ரல் 5ல் தொடங்கியது. தண்டியில் உப்புக் காய்ச்சும் போராட்டத்தி ஏராளமான மக்கள் காந்தியோடு ஈடுபட்ட இப்போராட்டச் செய்திகளை இதழ்க படங்களுடன் வெளியிட்டன.

இதைத் தொடர்ந்து 1930 ஆம் ஆண்டு மே மாதம் இதழ்கள் அவசரச் சட் (The Press Ordinance of may 1930) கொண்டுவரப் பட்டபோது இந்த இதழாளர்கள் முதன் முதலாக ஒன்று சேர்ந்து விவாதித்தனர்.

காங்கிரஸ் புல்லட்டின் என்ற இரகசியச் செய்தித்தாள் பம்பாயிலிருந்து விடுதலைப் போராட்டச் செய்திகளைப் பரப்பியது. 1927ல் நிறுவப்பட்ட ஃப்ரீ பிரஸ் ஆஃப் இந்தியா என்ற இந்தியச் செய்தி நிறுவனம் ஃப்ரீ பிரஸ் ஜெர்னல் என்ற ஆங்கில நாளிதழை 1930 ஜுன் 13 ஆம் நாள் தொடங்கியது. இவ்விதழ் இந்திய விடுதலைப் போராட்டச் செய்திகளை அதிகமாக வெளியிட்டது.

இதே காலத்தில் காந்தியாரின் சட்டமறுப்பு இயக்கம் இந்திய அரசியலில் அமைதியின்மையை உண்டாக்கியது. அதன் விளைவாக முதலாம் இரண்டாம் வட்டமேஜை மாநாட்டுச் செய்திகள் 1931 இல் இதழ்களில் வெளியாயின. இதழ்கள் நெருக்கடிகால அதிகாரங்கள் சட்டம் (Indian Press Emergency Powers Act 1931) கொண்டுவரப் பட்டது. கொலை, வன்செயல்களைத் தூண்டும் இதழ்கள் மீது நடவடிக்கை எடுக்க இச்சட்டம் வகை செய்தது. விளம்பரங்கள் தடை செய்யப் பட்டன. எனவே காங்கிரஸ் இயக்கச் சார்பு இதழ்கள் வருவாய் குன்றி மெலிந்தன. டிசம்பர் மாதம் வட்டமேஜை மாநாடு முடிந்து இந்தியா திரும்பிய காந்தி அரசுக்கு எழுதிச் சில சட்டங்களைத் திரும்பப் பெற வைத்தார். என்றாலும் ஆங்கில அரசு ஒவ்வொரு முறையும் போராட்டம் நிகழும்போதும் இதழ்களுக்குத் தடைச் சட்டங்களை விதித்துக் கொண்டே இருந்தது. காந்தியின் வரிகொடா இயக்கம், அன்னியப் பொருட்கள் புறக்கணிப்புப் போராட்டங்கள் ஆகியவற்றின் போதெல்லாம் இவ்வாறு சட்டங்களின் மூலம் கட்டுப் படுத்தியது அரசு. ஆனாலும், இவற்றைக் கண்டு தளராமல் சுதந்திர உணர்ச்சியை ஊட்டின பத்திரிக்கைகள். இந்து, சுதேசமித்திரன் ஆகியன சென்னையிலிருந்த வெளியாயின. இவையும் ஆனந்த பஜார் பத்திரிகா(வங்காளம்), அஜ் (காசி), விஸ்வகர்நாடகா (கர்னாடகம்), ஆந்திர பத்திரிகா (ஆந்திரா), மாத்ருபூமி (கேரளம்) ஆகிய செய்தித்தாள்களும் சுதந்தர உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டுவதில் முன்னணி இதழ்களாக விளங்கின.

Free Press of India

ஃப்ரீ பிரஸ் ஆஃப் இந்தியா செய்தி நிறுவன அமைப்பாளர் சதானந்தம் இந்தியாவின் எல்லா மாவட்டங்களிலும் இதழ்களைத் தொடங்கி விடுதலைப் போராட்டச் செய்திகளைப் பரப்ப எண்ணினார். அதன் அடிப்படையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்), தினமணி (தமிழ்), பம்பாயிலிருந்து நவசக்தி(மராத்தி), ஜனசக்தி (குஜராத்தி), கல்கத்தாவிலிருந்து ஃப்ரீ இந்தியா(ஆங்கிலம்) ஆகிய செய்தித்தாள்கள் 1933ல் தொடங்கப் பட்டன. காந்தியின் ஹரிஜன சேவக் இதழ் அவரது கொள்கையைப் பரப்பியது. மேலும், 1933 பிப்ரவரி 11 இல் காந்தியின் ஹரிஜன் என்ற இதழ் வெளிவந்தது. வெள்ளிக் கிழமைதோறும் வெளிவந்த இவ்விதழ் தீண்டாமை ஒழிப்பு பற்றிப் பேசியது. மகாதேவ தேசாய், நேரு, இராஜாஜி போன்ற தலைவர்களின் அறிவு பொதிந்த கட்டுரைகளைக் கொண்டு

வெளிவந்த ஹரிஜன் இதழ் காந்தியின் மறைவுக்காலமாகிய 1948 வரை வெளிவந்தது.

1935 இல் அரசியல் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டது. இதன் அடிப்படையில் காங்கிரஸ் கட்சி ஏழுமாநிலங்களில் அரசு அமைத்தது. இம் மாநிலங்களில் இதழ்களுக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதனால் எவ்வித இடையூறுமில்லாமல் பல நாள், வார, இதழ்கள் தோன்றின. சன்டே ஸ்டாண்டர்டு (பம்பாய் 1936), ஸ்டார் ஆஃப் இந்தியா, இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு, ஜுகாந்தர் (கல்கத்தா–1937), டான் (தில்லி–1937), இந்துஸ்தான் (தில்லி–1937), ஃப்ரீ பிரஸ் புல்லட்டின், பாரத் ஜோதி (பம்பாய்–1938), நேசனல் ஹெரால்டு (லக்னோ–1938), பிளிட்ஸ் (பம்பாய்–1941), வந்தேமாதரம் (பம்பாய்–1941), பீபிள்ஸ்வார் (பம்பாய்–1942), கல்கி (சென்னை 1941), தினத்தந்தி (மதுரை 1942) ஆகியவை குறிப்பிடத் தக்கவை. 1939 இல் ஏற்படுத்தப்பட்ட இந்தியா மற்றும் கீழைநாட்டு இதழ்கள் கழகம், 1941 இல் நிறுவப்பட்ட இந்திய மொழிச் செய்தித்தாள் கழகம் போன்றவையும், அச்சுக்கலை கண்ட பல்வேறு புதுமைகளின் அடிப்படையில் ஏற்பட்ட நவீன இயந்திரங்கள் முதலியவை இந்திய இதழியலின் வளர்ச்சிக்கு மேலும் வலு சேர்த்தன.

1939 இல் இரண்டாம் உலகப்போரில் இந்தியாவை ஈடுபடுத்திய ஆங்கில அரசின் செயலைக் கண்டித்து விடுதலை வீரர்கள் முழுமையான விடுதலை அளித்தால்தான் போர்ச் செயல்கள் தம்மால் ஆதரிக்கப்படும் என்று கூறினர். இதன் தொடர்ச்சியாக காந்தி மற்றும் பிறரால், சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கப்பட்டது. நேஷனல் ஹெரால்டு உலகப்போர்ச் செய்திகளை வெளியிட்டது. 1942 இல் ஆகஸ்டுப் போராட்டம் நடந்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் உச்ச கட்டமாக இப்போராட்டம் அமைந்தது. 96 செய்தித்தாள்கள் குற்றம் சாட்டப்பட்டு அரசால் நிறுத்தி வைக்கப்பட்டன. இறுதியாகக் காந்தியின் வெள்ளையனே வெளியேறு போராட்டம் நிகழ்ந்தது. நாடு கொந்தளித்தது. காந்தியே இதழ்க் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்ள இயலாமல் ஹரிஜன், நேஷனல் ஹெரால்டு, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற இதழ்கள் சிலகாலம் நிறுத்தி வைக்கப்படச் செய்தார். அரசினரின் இதழ்கள் மீதான அடக்குமுறையை எதிர்த்து 1943 ஜனவரி 6–ஆம் நாள் இந்திய இதழ்கள் வேலைநிறுத்தம் செய்தன. இந்தியர்கள் போராட்டத்திற்கு ஆங்கிலேய அரசு பணிந்தது. தலைவர்களை விடுதலை செய்தது.

நேருவின் தலைமையில் இடைக்கால அமைச்சரவை நிறுவப்பட்டது. 1947 ஜூன் மாதம் இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றத்தில் இந்திய விடுதலை பற்றிய

# இதழ்களின் பொறுப்புக்கள், சமுதாய முன்னேற்றத்தில் இதழ்களின் பங்கு, மற்றும் இதழ்களின் நெறிமுறைகள்

## முன்னுரை

மக்கள் தகவல் தொடர்பில் இதழ்களின் பங்கு மிக இன்றியமையாதது. டாக்டர் கே. சட்டர்ஜி "மக்கள் தகவல் தொடர்பு உண்மையான நடவடிக்கைகள், கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றினை ஒட்டியும் நாடு தனக்கு முன் வைத்திருக்கும் தேவைகள், கொள்கைகள் ஆகியவற்றினைச் சார்ந்தும் செயல்படுகிறது. இது ஓர் உயிரோட்டமான இயல்; எடுத்துக்காட்டாக, பத்திரிக்கைத் துறை மக்களுக்குத் தெரிவிப்பதையோ கற்பிப்பதையோ மட்டும் செய்வதில்லை. பொதுப்பணிகளின் கண்காணிப்பாளராகவும், மக்களின் உரிமைகளின் பாதுகாவலராகவும் செயல்படுகிறது" என்று கூறும் கூற்று இதழ்களின் பணிகளின் இன்றியமையாமையை வலியுறுத்தும். வாளைவிட பேனா முனை வலிவுடையது என்பர்.

இதழ்களை நடத்தும் இதழாளர்கள் மிகவும் பொறுப்படன் செயல்பட வேண்டும். இதழ்களில் பத்திரிகைகளில் வெளியாகி விட்டாலே ஒரு செய்தி உண்மை என்று மக்கள் நம்புவதால், இதழாளர்கள் அவற்றை மிகவும் பொறுப்புடன் கவனித்து நடத்த வேண்டும். இப்பாடத்தில் இதழ்களின் பொறுப்புக்கள், சமுதாய முன்னேற்றத்தில் இதழ்களின் பங்கு, இதழ்களின் நெறிமுறைகள் முதலியவற்றைப் பார்க்க இருக்கிறோம்.

## இதழ்களின் பொறுப்புகள்

1. மக்கள் இதழ்களில் வெளிவருபவை அனைத்தும் உண்மை என்று நம்பி விடுவதால் பத்திரிகைகள் பொய்ச் செய்திகளை வெளியிடாமல் உண்மையான செய்திகளையே வெளியிட வேண்டும்.
2. அறிவியல், தொழில்நுட்பப் புரட்சியின் விளைவாக செய்தித்தாள் அலுவலகத்திற்குள் ஏராளமான செய்திகள் வந்து விழுந்த வண்ணம் இருக்கும். அத்தகு சூழலில் பத்திரிகைகள் மக்களுக்குத் தேவையான செய்திகளை, பயனுள்ள செய்திகளை மட்டுமே தெரிந்தெடுத்து வெளியிட வேண்டும்.
3. சமுதாயத்தில் அமைதியைக் கெடுக்கும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவது நல்லதன்று. அத்தகைய செய்திகளை வெளியிடாமல் விட்டுவிட வேண்டும். எங்கோ ஒரு மூலை

யில் நடந்த சண்டைக்கு வேறு காரணம் கற்பித்து சாதி, சமயச் சண்டைகளைப் புதிதாகத் தூண்டிவிடும் வண்ணம் வெளியிட்டு விடாமல் அத்தகைய செய்திகளை வெளியிடாமலேயே இருந்துவிட வேண்டும்.

4. தகவல் தொடர்புசாதனங்கள் தம் செய்திகளின் மூலம் மக்கள் மனதிலும் செயலிலும் தாக்கம் ஏற்படுத்தி அதனால் பொது மக்களிடம் ஒட்டு மொத்தமாக எழும் ஒரு கருத்து பொதுமக்கள் கருத்து (Public opinion) ஆகும். இத்தகைய பொதுமக்கள் கருத்தை உருவாக்கும் வல்லமை, வாய்ப்பு, ஆற்றல் இதழ்களுக்கு இருப்பதாக செய்தித் தாள்களின் பொறுப்பு இன்னும் அதிகமாகிறது எனலாம். எனவே தவறான கருத்தை மக்கள் மத்தியில் வளர்த்து விடாமல் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு நல்லனவற்றை வளர்க்கும் கடமையும் பொறுப்பும் பத்திரிகைகளுக்கு மிகுதியும் உண்டு.

5. பத்திரிகைகள் நாட்டின் நலனையும் குறிக்கோள்களையும் மனதில் கொண்டு செயல்பட வேண்டும். நாட்டுப் பற்றும் பொதுமக்கள் நலம் பேணும் உணர்வும் கொண்டு செய்திகளை வெளியிடுதல் நல்லது. ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவது நாட்டின் கொள்கையாக இருக்குமானால், இதற்கேற்பப் பத்திரிகைகள் செய்தி வெளியிட வேண்டும்.

6. இதழ்களின் தரம் பாதுகாக்கப்பட வேண்டும். விற்பனை என்பது பத்திரிகைகளின் நோக்கம் என்றாலும்கூட அதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் பத்திரிகையின் தரத்தைப் பேணுவதில் நோக்கமாக இருக்க வேண்டும். பாலுணர்வைத் தூண்டும் வகையிலும், வன்முறைச் செயல்களைத் தூண்டும் வகையிலுமான முறையில் செய்தியையோ, படத்தையோ வெளியிடுவது பொறுப்பற்ற செயலாகும்.

7. இதழ்களின் பணிகள் என்று முக்கியமாகப் பின்வருவனவற்றை வரையறுப்பர். அவற்றைச் செயல்படுத்துவதில் இதழ்கள் தவறிவிடக் கூடாது.

அவையாவன:

1) அறிவித்தல்

2) அறிவுறுத்தல்

3) மகிழ்வித்தல்

4) வாணிபம் செய்தல்

i) அறிவித்தல்:

இதழ்களின் தலையாய பணியே செய்தியை மக்களிடம் பரப்புதல் ஆகும். மக்களுக்கு எல்லா விபரங்களையும் உடனுக்குடன் உண்மையாக விருப்பு வெறுப்பின்றி வழங்க வேண்டும். சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு ஆகியவை தொடர்பான எல்லாச் செய்திகளையும் வெளியிடும் பொறுப்பு இதழ்களுக்கு உண்டு. நடப்பு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். முதல் பத்திரிக்கைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் த்திரிகை ஆசிரியர்களே அறிவித்தலாகிய இப்பணி பற்றிப் பின்வருமாறு றிப்பிட்டனர். "இதழியல் நடப்பு நிகழ்ச்சிகளையும் கருத்துக்களின் போக்கு ளையும் மக்களுக்குத் தெரிவிக்கவும், விரிந்து செல்லும் பரப்பில் ஆக்கத்தை படுத்தவும் கட்டிக்காக்கவும் பல்வேறு வகையான கருத்துக்களையும் வெளிக் ட்டும் வகையில் நடைமுறைச் சிக்கல்களைப் பற்றிய விவாதத்தைத் தூண்டவும் யலவேண்டும். இவற்றிற்கெல்லாம் செய்திகளையும் கண்ணோட்டங்களையும் ல்லியமாக நடுநிலையில் வெளியிடுவதும் மோதுகின்ற இலட்சியங்களைப் றின்றி மதிப்பிடு செய்வதும் தேவையானதாகும்". என்று அவர்கள் றிப்பிட்டனர். விளம்பரங்களும் பொழுது போக்குச் செய்திகளும் பத்திரிகை ளை அதிகம் ஆக்கிரமித்துக் கொண்டாலும் கூட பத்திரிகைகளின் தலையாய ணி அறிவித்தலே ஆகும். வாசகர்கள் அதையே முதலில் எதிர்பார்க்கின்றனர். ன புதுச் செய்தி இருக்கிறது என்றுதான் பத்திரிகையை வாங்கியவுடன் ப்பர். செய்திகளை விற்பதுவே பத்திரிகைகளின் பணி. முக்கியமாக அன்றாட புச் சம்பவங்களைப்பற்றி அறிவிப்பது ஆகும். பொழுதுபோக்குச் செய்தி ன் மூலம் கூட மக்களுக்குத் தேவையான சில செய்திகள் அறிவிக்கப்படலாம்.

) அறிவுறுத்தல் :

இதழ்கள் செய்திகளை வெளியிடுவதுடன் அச்செய்திகளினூடே சில யமான விபரங்களையும் தந்து அச்செய்தி தொடர்பான பிறவற்றைப் பற்றி ளைச் சிந்திக்கச் செய்ய வேண்டும். அரசின் மக்கள் முன்னேற்றம் குறித்த ங்களை அறிவிப்பதுடன் அத்திட்டங்களைப் பற்றிய அறிவும் தெளிவும் ளுக்கு ஏற்படச் செய்து அத்திட்டங்கள் பற்றிய சிந்தனையை மக்கள் மனதில் டிவிட வேண்டும். சான்றாக, சாதி மதக் கலவரங்கள் பற்றிய செய்திகளை வங்களை) அறிவிப்பதுடன் அவற்றிற்கான தோற்றம் பற்றிய செய்திகளை யிட்டு அத்தகைய கலவரங்கள் எவ்வளவு தீயவை என்றும் இனி இத்தகைய

கலவரங்கள் மேலும் நடந்தால் அது நாட்டிற்கு எத்தகைய அழிவை விளைவிக்கும் என்றும் இத்தகைய கலவரங்கள் நிகழாது தடுக்க நாம் செய்ய வேண்டியது என்ன? என்று மக்கள் சிந்திக்கும் வகையில் செய்திகளை வெளியிட வேண்டும். இதற்காகத் தலையங்கம் எழுதலாம். சிறப்புக் கட்டுரைகள், கருத்துப்படங்கள், விளக்கப்படங்கள் போன்றன கூடுதலாக வெளியிடப்படலாம்.

## 3) மகிழ்வித்தல் :

இதழ்களின் மற்றொரு பணி மக்களுக்கு உற்சாகமூட்டுதல் ஆகும். கண்ணைக் கவரும் வண்ணம் படங்களையும் கருத்தைக்கவரும் இலக்கியப் படைப்புகளையும் வெளியிட்டு புதுமையான கட்டுரைகள். ரசித்துச் சிரிக்கக் கூடிய நகைச்சுவைத் துணுக்குக்களையும் பார்த்துப் படித்து மகிழ்த்தக்க சித்திரத் தொடர்களையும் புகழ் பெற்றோரின் பேட்டிகளையும் மக்கள் மிக விரும்பும் திரைப்படச் செய்திளையும் வெயிட்டு மக்களை மகிழ்விப்பது ஒரு நோக்கமாகும். இன்றைய பத்திரிகைகளின் பல்வேறு இணைப்பு மலர்கள் மக்களுக்கு இத்தகைய பல்வேறு செய்திளைக் கொடுத்து மக்களை மகிழ்விக்கின்றன.

## 4) வாணிபம் செய்தல்:

இதழாளர்கள் இதழ்கள் அச்சிடுவதே விற்பனை என்ற நோக்கத்தில்தான். ஆதலால் இதழ்கள் வாணிப நோக்கத்தோடும் செயல்பட வேண்டியுள்ளது. ஓரளவு வருவாய் தேடிக்கொள்ளும் இதழ்களால்தான் தொடர்ந்து இதழ்களை வெளியிட்டு சமுதாயத்திற்குப் பலன் விளைவிக்கும் கருத்துக்களைக் கூறமுடியும். இதழ்கள் அதிகமான விளம்பரங்களை வெளியிட்டு வருவாயைப் பெருக்கிக் கொள்வது இந்த நோக்கில்தான். நிறைந்த வருவாயை இவ்வாறு பெருக்கினால் பத்திரிகையைக் குறைந்த விலையில் விற்க இதழாளர்களுக்கு ஏதுவாக இருக்கும். இத்தகைய நோக்கில் வெளியிடும் விளம்பரங்கள் நாட்டின் வணிக வளர்ச்சிக்கும் துணையாகின்றன.

இந்நான்கு முதன்மைப் பணிகள் தவிரவும் மக்களிடம் இருக்கும் உறுதியான கருத்துக்களை நம்பிக்கைகளை மீண்டும் வலுப்படுத்துதல், மக்களிடம் இருக்கும் சில நடைமுறைப் பழக்க வழக்கங்களை மாற்றியமைத்தல், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறையினருக்குச் சமுதாயத்தின் பண்பாட்டை, கலாச்சாரத்தைப் பரிவர்த்தனை செய்தல் போன்றவை முக்கிய பணிகளாகச் சுட்டப்படலாம்.

...ல்லைட் அறிக்கை இதழாளர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு ...
...வர்கள் சில தெளிவான பொறுப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும்
...விளக்குகிறது அவை :

1) தனது நிர்வாகம் ஏற்படுத்தியிருக்கும் விதிமுறைகளை மதித்து நடத்தல்

2) சமுதாய நலன் மற்றும் மக்கள் கருத்தை உருவாக்குவதில் சமுதாயத்தின் மீதான பொறுப்புடன் செயல்படுதல்

3) பொதுவான பத்திரிகைச் சட்டங்களுக்குட்பட்டுப் பொறுப்புடன் நடந்துகொள்ளல்

4) அகிலஉலக மக்கள் நலன் கருதி மனித சமூக மதிப்புக்களைப் பொறுப்புணர்வுடன் போற்றுதல்

...னவே இத்தகைய பொறுப்புக்களுடன் பத்திரிகைகள் செயல்பட்டால் ...த்தில் நடைபெறும் செய்திகளை மக்கள் உடனுக்குடன் அறிதல், சமூகத்தில் ... மக்கள் அச்செய்திகள் தொடர்பாக என்ன நினைக்கிறார்கள் என்பதையும் ...ந்து அறிதல், ஒரு பரம்பரையிலிருந்து இன்னொரு பரம்பரைக்குத் தகவல் ...டு செல்லப்படுதல் ஆகிய பயன்களைப் பெறுவர்.

## ...தாய முன்னேற்றத்தில் இதழ்களின் பங்கு :

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இந்தியா தேசிய சுதந்திரப் ...ட்டத்தில் குறிப்பிட்ட பங்கை ஆற்ற வேண்டிய கடமையை எதிர்நோக்கியது. ...ராட்டத்தில் பத்திரிகைகளின் பங்கும் மகத்தானதாக அமைந்தது. ...ன்னர் சுதந்திர இந்தியாவில் அத்தகைய ஓர் உன்னதமான கடமை ... பத்திரிகைகளுக்கு இல்லை என்பதான ஓர் உணர்வு உணரப்பட்டது. ...உருவாக்கத்தில் பத்திரிகைகளின் பங்கு இனி என்ன? அரசுக்கு ஆதர... செயல்படுவதா? எதிர்த்துச் செயல்படுவதா? என்பது போன்ற கேள்விகள் ... முதல் பத்திரிகைக் குழுவின்படி "பத்திரிகைகள் சமூக, பொருளாதார. ... நிலைபெறும் பொருட்டும் அதைத் தொடர்ந்து பாதுகாக்கவும் உதவுதல்" ...களின் தலையாய கடன் என்று தீர்மானிக்கப்பட்டது.

...னால் இந்தியாவைப் பொறுத்தவரை பத்திரிகைகள் கண்மூடித் ... அரசுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதில்லை. சமுதாய, பொருளாதார ...றுக் கொண்டுவருவதில் காவலனாகவும் கிரியா ஊக்கியாகவும் ...கள் செயல்படுதல் தேவை. தேவைப்படும் இடங்களில் படைப்பாக்கத் ...ஆய்வு செய்தும் வேலைஇல்லாத் திண்டாட்டம், ஏழைகளைத்

துன்புறுத்தல், நிதிக் குறைவு, காவல் துறையின் அராஜகம், வளர்ச்சித்திட்டங்க
போன்றனபற்றிப் பொதுமக்களுக்கு விளக்கவேண்டும்.

நம்பிக்கைக்கு உரியனவாய் பத்திரிகைகள் விளங்குதல் பத்திரிகைகளி உயிர்நாடி ஆகும். பத்திரிகைகளின் மீதான நன்னம்பிக்கைக்கும் பங்க விளைவிக்கப்பட்டது எமர்ஜென்ஸி காலத்தில். இதழாளர்கள் அரசின் சலுகைக ஏதையும் தனிப்பட்ட சொந்தவாழ்விற்காகப் பெறாமல் செயல்படவேண்டு என்பதில் கவனமாக இருக்க வேண்டும், ஏனெனில் பத்திரிகைச் சுதந்திரத்தி காவலர்களே இதழாளர்கள்தான். அவர்களே சில சலுகைகளுக்காக அரசி கால்களில் விழுந்து விட்டால் பின்னர் அவர்களுக்குத்தான் இன்னல் நேரிடும்.

இந்தியாவைப் பொறுத்தவரை தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பது மக்க தொடர்புச் சாதனங்களின் தலையாய கடனாகும். பல மாநிலங்களில் பல்வே மொழி, கலாச்சாரம், மதம் சார்ந்த மக்கள் வாழ்ந்து வரும் நாடு இந்தியா ஆகு இத்தனை தரப்பட்ட மக்களையும் ஒன்றிணைக்குப் பணி த்கவல் தொட சாதனைகளுக்கு உண்டு.

சமுதாய முன்னேற்றத்திற்காகவும் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சிவ ஏற்படுத்துவதற்காகவும் சமுதாயத்தை வளர்ச்சிப் பாதையில் கொண செல்வதற்காகவும் பத்திரிகைகள் செயல்படவேண்டும். ஏனெனில் சமுதாயத்த வாழ்வோடும் வளர்ச்சியோடும் பத்திரிகைகள் இரண்டறக் கலந்து விட்டன. தஎ வாசகர்கள் யார் என்று இனங்காண்பது பத்திரிகைகளின் முக்கியப் ப ஏனெனில் சமுதாயத்தில் படித்தவர், படிக்காதவர், உயர் அந்தஸ்தில் உள்ள ஆண்கள், பெண்கள். பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள், வறுை கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் என்று பல்வேறுபட்ட வாசகர்கள் உள்ள இவர்களில் செய்தியை யாருக்குச் சொல்லப்போகிறோம்? குறிப்பிட்ட மக்களு காக என்றால் அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எப்படிச் சொல்ல வேண் என்று தீர்மானித்துக் கொள்வது அவசியம்.

பத்திரிகைகள் செய்தியைத் தருவதைமட்டும் நோக்கமாகக் கொள்ளா அச் செய்திகள் எந்த அளவு மக்களைச் சென்று சேர்ந்துள்ளன என்றும் கணக் வேண்டும். அப்படியானால்தான் செய்தியின் உண்மையான பயன் தெரியவ

அறிவு வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, தேசிய ஒருமைப்பாட்டிற்கு எ மூன்று நிலைகளில் பத்திரிகைகள் சமுதாய முன்னேற்றத்திற்கு அதிகமா பாடுபடவேண்டும். கல்வி வளர்ச்சி, அதுதொடர்பான நிகழ்ச்சிகள். நாட் பொருளாதார வளர்ச்சி, தனிமனிதனின் பொருளாதார முன்னேற்

னைவரும் இந்தியர் என்ற எண்ணத்தைத் தூண்டுதல் ஆகியன பற்றிய
ம்பாட்டு நோக்கில் பத்திரிகைகள் பேசவேண்டும்.

விழிப்புறுகின்ற சமுதாயமே மேலும்மேலும் மேன்மையுறும். வளர்ச்சி
ற சொல்லின் பொருளிலேயே விழிப்புணர்ச்சியும் அடங்கும். உறங்கிக்
க்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் பணியை நாடு முழுவதும் சென்றுசேரும்
திரிகைகள்தாம் செயல்படுத்த வேண்டும். மக்களைத் தட்டி எழுப்பி,
துணர்ச்சி ஊட்டி, அறிவுசார்ந்த கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும்.

திட்டமிட்டு தெளிவான முடிவோடு செயலாற்றும் தன்மைகளால் ஏற்படக்
டும் சமுதாய மாற்றத்திற்குப் பத்திரிகைகள் பங்காற்ற வேண்டும். சமூக
றத்தாழ்வு, ஜாதிமத வேறுபாடு. சமூகத்தில் உள்ள குற்ற உணர்வு போன்ற
வேறு சிக்கல் நிலைகளை மாற்றியமைக்கப் பத்திரிகைகள் பங்காற்ற
ண்டும்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளுள் இந்தியா குறிப்பிடத்தக்க
டு ஆகும். ஜனநாயகம் தழைப்பதற்கும் பத்திரிகைகளின் பணி சிறப்பாக
மைதல் வேண்டும். அரசியல் அமைப்பில் ஜனநாயகத்தைக் காப்பதற்குப்
வேறு பிரிவுகள் வகுக்கப்பட்டிருந்தாலும் ஜனநாயகக் காவலனாக
ங்குபவை பத்திரிகைகளே. ஜனநாயகக் காவல் நாய் ( Watch dog) என்றும்
நாயகக் காப்புத்தேவதை என்றும் செய்தித்தாள்கள் குறிப்பிடப் படுவதி
ந்தே ஜனநாயகத்தில் இதழ்களின் பங்கை உணரலாம். வெள்ளையர் ஆட்சிக்
லத்தில் இராஜாராம் மோகன் ராய் போன்றோர் மக்களின் குறைகளை
ட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டுவரும் மனுக்களாகத் தம் இதழ்களைப்
ன்படுத்தாமல் வருங்காலத்தில் அரசியல் சமுதாய உரிமைகளைத்
ப்பதற்கு மக்களைத் தயார்ப்படுத்தும் சாதனங்களாகவும் இதழ்களைப்
ன்படுத்தினர்.

அரசின் தவறான கொள்கைகளைத் துணிவோடு இதழ்கள் சுட்டிக்காட்ட
டியது பத்திரிகைகளின் கடமை. அமெரிக்காவில் வாட்டர்கேட் ஊழல்களை
பலத்திற்குக் கொண்டு வந்து அரசியல் மாற்றம் கொண்டு வந்ததில் பெரும்
கு வகித்தவை இதழ்களே ஆகும். மக்கள் கருத்தை உருவாக்கிவிடும்
ல்மை பத்திரிகைகளுக்கு உண்டு என்பதால்தான் நெப்போலியன் தன்
சிக் காலத்தில் பத்திரிகைகளைத் தடைசெய்தார். ஜெர்மனில் இட்லர் தம்
டுமக்கள் அறிவுவிளக்கம் பெறக்கூடாதென்று இதழ்களைத் தடைசெய்தார்.
வே மக்கள் கருத்தை உருவாக்கும் சக்தி வாய்ந்த பத்திரிகைஉலகம்
துமக்கள் கருத்தை எழுச்சி பெற வைப்பது மட்டுமின்றி மக்கள் கருத்துக்

களைத் திறனாய்வுக்குட்படுத்தி உடன்பாடான கருத்துக்களையும் மாறுபா
கருத்துக்களையும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவும் கருத்துப்படம் வரைவோ
ஜனநாயக அமைப்பு முறைகளை அறிந்து வைத்திருக்க வேண்
ஜனநாயத்தை அரிக்கும் நோய்களைக் கண்டுபிடித்து அத்தகைய தீயசக்திக
அழிக்க இறுதியான உறுதியான முடிவைப் பத்திரிகைகள் எடுக்க வேண்
அரசின் முடிவுகள் மக்களுக்குச் சாதகமாக அமைந்தால் அவற்றை ஆத
வேண்டும், தேர்தல் காலங்களில் மக்களாட்சியில் தேர்தலின் பங்கு மு
வாக்காளர் கடமை போன்றவற்றை உணர்த்த வேண்டும். தேர்தல் காலத்
விழிப்புடனும் பொறுப்புடனும் செயல்படும் இதழ்கள் நாட்டில் நிலை
ஜனநாயக அரசை அமர்த்துகிறது. மகாத்மா காந்தி குறிப்பிட்டது போல இதழ்
ஜனநாயக நாட்டில் பின்வரும் வழிமுறைகளில் செயல்பட வேண்டும்.

1) பொதுமக்கள் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அதனை வெ
படுத்துவதே இதழ்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

2) சிறந்த உணர்வுகளை மக்களிடையே எழுப்ப வேண்டும்.

3) குறைகளைப் பயமில்லாமல் சுட்டிக்காட்ட வேண்டும்.

இதழ்கள் மக்களுக்குச் செய்திகளைத் தருதல், மக்களிடம் மாறு
கருத்துக்களை வெளியிடுதல், பொதுச் சிக்கலில் மக்களை ஈடுபடச் செய்
ஆகிய பணிகளின் மூலம் தாம் ஒரு 'தொடர்ந்து நடைபெறும் சட்ட மன்றம்' எ
பெயர் பெற்றுள்ளன. பத்திரிகைகள் மக்களுக்காகப் பேசுகின்றன. ஜனந
முதுகெலும்பைப் பலப்படுத்துகின்றன, நாட்டின் நாடித் துடிப்பை வெளிப்படு
கின்றன. நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை உலகறியச் செய்கின்றன. ஜன
மரபுகளைக் காப்பதில் அரசிற்கும் மக்களுக்கும் இடையே இணைப்புப் பாலம்
செயல்பட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் மக்களாட்சியில் இதழ்கள்
செய்திபரப்பும் பணி, 2) செய்தி விளக்கப் பணி, 3) செய்தி விமர்சனப் பணி
மக்கள் கருத்தை உருவாக்கும் பணி, 5) ஜனநாயகக் காவல் பணி ஆ
பணிகளைத் திறம்படச் செய்ய வேண்டும்.

## III. இதழ்களின் நெறிமுறைகள் :

(1) வாசகர்கள் அல்லது பொதுமக்கள் நலனைக் காக்கவும் (2) இதழ்ப்பணி
ஈடுபட்டுள்ள தம் தொழிலாளர் நலனைக் காக்கவும், (3) பதிப்பாசிரியர்க
வழிநடத்திச் செல்லவும் தன் பங்குதாரர்களின் பொறுப்பினை வரையறுக்க
(4) விளம்பரதாரர் போன்ற பத்திரிகையின் சேவைகளைப் பயன்படுத்துவோரு

...டர்ந்து நல்லமுறையில் செயல்படவும் பத்திரிகைகளுக்கெனச் சில ...றிமுறைகளை வரையறை செய்து கொள்வது சாலச் சிறந்தது. இந்தியாவில் ...த்திரிகைக் குழுவும் (Press Council) அகில இந்தியப் பத்திரிகை ஆசிரியர் ...ாடும் பல்முறை கூடியும்கூட இன்னும் குறிப்பிட்ட நெறிமுறைகளை ...குக்கவில்லை என்று சொல்ல வேண்டும். இருப்பினும் சில நெறிமுறைகளை ...தழாளர்கள் உணர்ந்து வைத்திருக்கின்றனர். அவை:

1) கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்

2) செய்தி ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளும் சுதந்திரம்

3) செய்தி வெளியிடுவதில் நேர்மை, துல்லியம், உண்மை ஆகியவற்றைப் பின்பற்றுதல்

4) பொதுமக்கள் தம் தேசிய, மத, இன நலன்சார்ந்த உரிமைகளைப் பாதுகாத்து நாட்டின் அமைதிகாப்பதில் பொறுப்புடன் செயல் படுதல்

5) தேசிய ஒருமைப்பாடு, சுதந்திரம் பேணல்

6) பதில் கூற அல்லது திருத்தம் செய்து கொள்ளும் உரிமை

7) தொழில் சார்ந்த இரகசியங்களைப் பேணுவதில் மரியாதையுடன் செயல்படுதல்

8) வெவ்வேறு நாடுகளின் பண்பாட்டு, சமுதாய, இன மரபுகளை மதித்தல்

முதலியன. தகவல் தொடர்புக் கருவிகள் மக்களாட்சியில் ஒரு முக்கிய அங்கமாக வலிமை மிக்க கருவியாகச் செயல்படுவதால் பத்திரிகை தன் செயல்பாட்டிற்கு எனச் சில நெறிமுறைகளை வகுத்துக் கொள்வது நலம் என்று எண்ணி 1923 ஆம் ஆண்டிலேயே சில இதழியல் நெறிமுறைகளை அமெரிக்கச் செய்தித்தாள் ஆசிரியர் சங்கம் உருவாக்கியது, அவையாவன.

1) பொறுப்புடமை, ( Responsibility)

2) சுதந்திரம் ( Freedom of the press)

3) தனித்துவம் ( Independence)

4) பண்பாடு (Culture)

5) துல்லியம் (Accuracy)

6) நடுவுநிலைமை ( Impartiality)

7) நன்முறைச் சித்திரிப்பு (Fairplay)

முதலியன. இவற்றைத் தனித்தனியே காண்போம்.

## 1) பொறுப்புடைமை : (RESPONSIBILITY)

வாசகர்களைக் கவர பல்வேறு வழிமுறைகளைக் கையாளும் பத்திரிகை உரிமை பத்திரிகைகளுக்கு இருந்தாலும் இந்த உரிமைகளைக் கையாளும் போது பொதுமக்கள் நலன் கெடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இப் பொறுப்புணர்ச்சி பத்திரிகைகளுக்கு அவசியம் தேவை. செய்திகளை வெளியிடும்போது செய்தியின் விளைவை எண்ணிப் பார்த்துப் பொறுப்புடன் வெளியிட வேண்டும். சான்றாக சாதி, மதக் கலவரங்களைப் பற்றிச் செய்தி வெளியிட்டால் அது மக்கள் மனத்தைப் புண்படுத்தாத வகையில் குறிப்பிட்ட சாதியை மதத்தைக் குறிப்பிடாமல் எழுதவேண்டும். ஏனெனில் சாதி, மதத்தின் பெயரைக் குறிப்பிட்டு எழுதினால் அது மேலும் பல்வேறு இடங்களில் கலவரம் வெடிக்கும் சூழ்நிலையை உருவாக்கி விடக்கூடும். எந்த ஒருபக்கமும் சாராமல் தன்னலம், குறுகிய நோக்கம் முதலியவற்றைத் தவிர்த்து உண்மை நிலையை உணர்த்தும் வகையில் செய்திகளைப் பொறுப்புணர்ச்சியுடன் எழுத வேண்டும்.

## 2) சுதந்திரம் : (FREEDOM OF THE PRESS)

மக்களாட்சி முறை என்ற கட்டிடத்தின் நான்காவது தூண் என்று பத்திரிகை குறிப்பிடப்படுகின்றது. அத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ள பத்திரிகையானது சுதந்திரத்துடன் பணியாற்ற வேண்டும். அரசினர் அதிகாரம் நாள்தோறும் வலுவடைந்து வரும் இன்றைய நிலைமையில் அரசின் திட்டங்களில் உள்ள குறை களை அச்சமின்றி எடுத்துச் சொல்லப் பத்திரிகைச் சுதந்திரம் இன்றியமையாத ஒன்றாகும். பத்திரிகைகள் பத்திரிகைச் சுதந்திரத்துடன் பணியாற்றுவதன் மூலம் தான் சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். சட்டத்திற்குப் புறம்பாக போகாமல் ஏதைப்பற்றியும் வெளியிடவும் விவாதிக்கவும் இதழ்களுக்கு கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருக்க வேண்டும். இந்திய அரசியல் சட்டம் 19 (1) - வில் எழுத்துச் சுதந்திரம் குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் தம் கருத்தை சுதந்திரமாக வெளியிடக் கருத்துச் சுதந்திரம் உண்டு, தகவல்தொடர்புக் கருவிகள் பொதுநலனை மனத்திற் கொண்டு சமநிலையோடும் அறவுணர்வோடு செயல்படச் சுதந்திரம் வேண்டும். பத்திரிகைகள் பிறரின் கைப்பாவையாக இயங்காமல் சுயகட்டுப்பாட்டுடன் பொது நலனுக்குத் தடையாக உள்ளவற்றை

3) தனித்துவம் : INDEPENDENCE

பத்திரிகைகள் தனக்கெனத் தனித்துவம் கொண்டு விளங்கவேண்டும் அரசாங்கம் அதிகார பலத்தைக் காட்டும் சூழலில் தன்னிச்சையாகச் செயல்பட முடியாவிட்டாலும் கூடத் தன் தனித்தன்மையை விட்டுவிடாமல் தனித்து இயங்க வேண்டும். அஞ்சாது நிறைகுறைகளை விமர்சிக்கும் போக்கினை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன்னலத்துடன் எவருக்கும் ஊறு விளைவிக்கும் செய்திகளை வெளியிடாமல் தனித்துவம் பெற்று விளங்கினால் பயமில்லாமல் கருத்துக்களை வெளியிட முடியும். பணத்திற்கு அடிமையாகி விடாமல் செயல்படவேண்டும். மக்கள் நலனையே பெரிதும் மனதில்கொண்டு செயல்பட வேண்டும். தெரிந்தே ஒருபக்கம் சார்ந்து உண்மைக்குப் புறம்பாகத் தலையங்கம் எழுவதோ செய்திகளுக்குத் தவறாக விளக்கம் தருவதோ விமர்சிப்பதோ முறையாகாது.

4) பண்பாடு : CULTURE

பண்பாடற்ற முறையில் செய்திகளை வெளியிடுவது தவறாகும். குற்றங்கள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வன்முறை, போன்ற செய்திகளை வெளியிடும்போது நுணுக்கமாக எழுதுவதன்மூலம் அவ்வுணர்வுகளை மக்களிடம் தூண்டிவிட்டு விடக்கூடாது, அவ்வாறு எழுதுவது நாகரிகமன்று.புறம்பாக எழுதக் கூடாது. திரித்துக் கூறாமை, முரண்பட்டு எழுதாமை, இருபொருள் பட எழுதாமை தோராயமாக ஊகத்தின் அடிப்படையில் எழுதாமை ஆகிய முறைகளைப் பின்பற்றவேண்டும். துல்லியமாக எழுதினால் அப்பத்திரிகைமீது மக்களுக்கு நம்பிக்கை வளரும்.

5) நடுவுநிலைமை: IMPARTIALITY

நடுநிலை நின்று செய்திகளை வெளியிடுவது பத்திரிகைகள் பின்பற்ற வேண்டிய நெறிமுறை ஆகும்.

> "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
> கோடாமை சான்றோர்க்கு அணி"

என்ற குறளின்படி துலாக்கோல் போல நடுநிலையுடன் நின்று எப்பக்கமும் சாராமல் செய்திகளை வழங்க வேண்டும் பத்திரிகைகள். செய்தியின்

கோணங்களை மாற்றி வாசகர்களைத் திசை திருப்பக் கூடாது. ஒருநிறுவனம் தனியார் ஆகியோரைச் சார்ந்து தன் விருப்புவெறுப்பின்படி செய்திகளை எழுதிவிடக் கூடாது. உள்ளதை உள்ளவாறு எழுதவேண்டும். செய்திகளைப் பற்றித் தன் கருத்தைக் கூறினாலும் நடுநிலையுடன் தன் கருத்தைக் கூறவேண்டும்.

பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ள பண்பாடற்ற முறை குறித்த கண்டனங்கள் வந்துவிட்டால் அது பத்திரிகைக்கு அவமானத்தை ஏற்படுத்தும். எனவே சமுதாயம் கடைப்பிடிக்கும் மரபுகள், பண்பாடுகள், நாகரிகம் முதலிய வற்றை மீறாமல் கொச்சைச் சொற்கள், ஆபாசச்சொற்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி எழுதாமல் மக்கள் ஏற்கும்வகையில் தரமாக எழுதவேண்டும்.

## 6) துல்லியம் :

இதழ்கள் நம்பிக்கையாகவும் உண்மையாகவும் துல்லியமாகவும் செய்திகளைத் தருதல் வேண்டும். ஒரு நிருபர் காலத்தோடு போட்டி போட்டு கொண்டு முந்திச் சென்று செய்தி சேகரிக்க வேண்டும், செய்தி வெளியீட்டிற்காக செய்தியை வழங்கக் கொடுக்கப்பட்டிருக்கும் காலக்கெடுவின் மீது அவர் கவனம் வைத்துக் கொண்டே செய்திக்கதைகளை உரிய நேரத்தில் சரியாகச் சேகரித்து எழுதித்தரவேண்டும். இவ்வளவு துரிதத்திற்கிடையிலும் துல்லியமாகத் தவறின்றி செய்தியை அவர் சேகரித்துத் தர வேண்டும். "சரியாக எழுது இப்பொழுதே எழுது ( Get it right and get it now) "என்பதும் அய்யமிருப்பின் அகற்றிவிடு" (When in doubt cut it out ) என்பதும் பொதுவாக எல்லா நிருபர்களும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டி வாசகங்கள் ஆகும். மக்களைச் கவரவேண்டும் என்பதற்காக உணர்ச்சியைத் தூண்டும் முறையில் உண்மைக்குப் புறம்பாக எழுதக் கூடாது.

## 7) நன்முறைச் சித்திரிப்பு

குறிப்பிட்ட ஒரு செய்தியை வெளியிடுவதா? வேண்டாமா என்ற முடிவை வாசகர்களின் நலனை மனதில் கொண்டே எடுக்க வேண்டும். உதாரணமாக ஒரு செய்திக் கதை உண்மையிலேயே செய்தியாகவும் செய்தித்தாளில் இடம் பெறத் தகுதியுடையதாகவும் இருக்கும் பட்சத்தில் அச்செய்தியை வெளியிடாமல் நிறுத்தி வைத்தல் என்பது வாசகர்களுக்கு முறையற்ற செயலைச் செய்வதே ஆகும். அறமுறைக்கு மாறி ஒரு செய்தியை வெளியிடும் பட்சத்தில் ஒருவர் வருத்தம் தெரிவித்து அதைத் திருத்திக் கொள்ள வேண்டினால் அச்செய்தி எவரையேனும் பாதித்திருந்தால் வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்கவேண்டும். பிறரைப் பழிவாங்கும் எண்ணத்தில் செய்தி எழுதுதல் தவறு.

# இதழ்கள் தொடங்கும்முன் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இதழ்களின் நிர்வாகம்.

முன்னுரை:

இளம் வயதிலேயே சிலருக்குக் கைப்பிரதிகள் நடத்துவதில் ஆர்வம் இருக்கும். அத்தகையோர் துண்டுச் சீட்டுகளாகத் தம் கொள்கைகளை அல்லது தாம் சார்ந்திருக்கும் இயக்கக் கொள்கைகளை எழுதி வெளியிடுவதைக் காணலாம். நம் நாட்டில் இவைகளுக்குப் போதிய ஊக்குவிப்பு இல்லாததால் போதிய திட்டமிடலும் (Planning) பயிற்சியும் இல்லாததால் நின்றுவிடுகிறது. மேலைநாடுகளில் இளம்வயதில் மாணவர்கள் பத்திரிகை நடத்துவதை ஏராளமாகப் பார்க்கலாம். பொதுவாகத் தொழில் நிறுவனங்கள், சேவை மையங்கள், பொழுதுபோக்கு மன்றங்கள் தம் உபயோகத்திற்கென்று இல்ல இதழ்கள் போலச் சிறு பத்திரிகைகளை வெளியிடுவது உண்டு. நம் நாட்டில் பத்திரிகை துவங்க விரும்புவோர் தாராளமாகப் பத்திரிகை துவக்கலாம். ஆனால் அவ்வாறு துவக்குவதற்குச் சில நெறிமுறைகள் உண்டு. அவற்றைக் கட்டாயம் பின்பற்றியே ஆகவேண்டும். ஒரு பத்திரிகையைத் துவக்குவது எப்படி என்பதையும் அப்படித் துவக்கப்பட்ட பத்திரிகை நிர்வாக அமைப்பு எப்படி இருக்கும் என்பதையும் இந்தப்பாடத்தில் காண இருக்கிறோம்.

இன்றைய உலகில் வாணிபநோக்கோடு பத்திரிகை நடத்தினாலும் சரி இலட்சிய நோக்கோடு பத்திரிகை நடத்தினாலும் சரி யாராக இருந்தாலும் பத்திரிகை துவங்குதற்கும் நடத்துவதற்குமான நெறிமுறைகளை பின்பற்றியே ஆக வேண்டும். எனவே செய்தித் தாள்களைத் துவங்கும் எண்ணம் உடையவர்கள் அந்த நெறிமுறைகளைப் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பத்திரிகை உருவாவதற்கான நெறிமுறைகள் பல, அவையாவன:

## 1) செய்தித்தாள்கள், இதழ்களைப் பதிவு செய்தல்

நம் நாட்டில் ஒருவர் பத்திரிகை துவங்க விரும்பினால் அவர் தாராளமாகத் துவக்கலாம். அதற்கு எந்தவிதத் தடையும் இல்லை. ஆனால் அவர் அரசிடம் இருந்து முறையாக அனுமதி பெற்றபின்னரே முறையாகச் செய்தித்தாள் நடத்த முடியும். முதலில் செய்தித்தாள் அல்லது இதழ் எந்த இடத்திலிருந்து வெளியிடப் படப் போகிறது. எந்த மொழியில் வெளியிடப்படப் போகிறது. யாருக்காக வெளியிடப்படப்போகிறது காலைப் பத்திரிகையா? மாலைப் பத்திரிகையா?

என்பன பற்றித் தீர்மானிக்கவேண்டும். பின்னர் எந்தப்பகுதியில் பத்திரிகையை நடத்தப் போகிறாரோ அந்தப் பகுதியின் மாவட்ட நீதிபதியிடமோ நகர தலைமை நீதிபதியிடமோ குறிப்பிட்ட படிவத்தில் ஓர் உறுதிமொழியைக் கொடுக்க வேண்டும். அந்த மனுவில் தொடங்க விரும்பும் இதழின் பெயர், பத்திரிகை வெளியாகும் மொழி, பத்திரிகை வெளிவரும் கால அளவு (நாளிதழா, வார இதழா, மாதஇதழா என்ற விவரம்) வெளியிடும் நபரது முகவரி, அச்சிடுபவர் முகவரி, அச்சக முகவரி முதலியவைகளைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்தை மாவட்ட நீதிபதி முன்னிலையில் கையெழுத்திட்டுக் கொடுக்க வேண்டும். இதழுக்கு இட விரும்புகின்ற பெயருடன் குறைந்தது மூன்று மாற்றுப்பெயர் களையும் தரவேண்டும். அவற்றில் ஏதாவது ஒரு பெயரை வைத்துக் கொள்ள அனுமதிப்பர்.

இந்த மனு இந்தியப் பத்திரிகைப் பதிவாளர் (Registerar of Newspapers for India) அலுவலகத்திற்கு அனுப்பப்படும். அங்கு இந்தியாவில் ஏதேனும் ஓர் இடத்தில் இதே பெயரில் வேறு பத்திரிகை முன்னரே வெளிவந்துள்ளதா என்று ஆய்வு செய்யப்படும். பின்னர் அதே மாநிலத்தில் அதே மொழியியல் இப் பெயர் கொண்ட பத்திரிகை வெளிவந்துள்ளதா என்றும் ஆய்வு செய்யப்படும். இந்தியாவில் வேறு எந்த மொழியிலும் அதே பெயர் கொண்ட பத்திரிகையோ அல்லது இப்பத்திரிகை வெளியிடப்படப்போகும் மொழியிலோ இப்பெயர் கொண்ட பத்திரிகை இல்லை என்று திட்டவட்டமாக ஆய்ந்து அறிந்த பின்னரே முறைப்படியான அனுமதி அளிக்கப்படும்.

இதன்பின்னர் மனுதாரருக்குக் கடிதம் மூலம் அழைப்புவரும். குறிப்பிட்ட நாளன்று பத்திரிகையை வெளியிடுவோரும் அச்சிடுவோரும் கலெக்டர் அலுவலகம் சென்று ரெவின்யூ அதிகாரி அந்தஸ்திலுள்ள ஒருவர் முன் ஆஜராகிக் கையெழுத்திட வேண்டும். அவரும் சில கேள்விகளைக் கேட்டுவிட்டு பின்னர் மாவட்ட நீதிபதி (பெயர்பற்றிய ஒப்புதலைச் செய்தித்தாள்களின் பதிவாளரிட மிருந்து பெற்ற பின்னர்) இதழினைத் தொடங்குவதற்கு அனுமதி கொடுப்பார்.

இதழைத் தொடங்க அனுமதி கிடைத்தபின்னர் நாளேடுகள், வாரம் இருமுறை வெளிவரும் பத்திரிகைகள், வாரம் மும்முறை வெளிவரும் பத்திரிகை கள், வாரப் பத்திரிகைகள் ஆகியவை பத்திரிகை பதிவாளரிடமிருந்து அனுமதி பெற்ற ஆறு வாரங்களுக்குள் வெளிவர வேண்டும், மற்ற பருவ இதழ்கள் அனுமதி பெற்ற மூன்று மாதத்தில் வெளிவர வேண்டும். வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் பத்திரிகை வெளிவராவிட்டால் மீண்டும் புதியதாக விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும்.

பத்திரிகை அச்சிடுபவர், வெளியிடுபவர், பத்திரிகையின் உரிமையாளர், ஆசிரியர், இவர்களில் எவர் மாறினாலும் அச்சிடும் இடம், வெளியிடும் இடம் இவற்றுள் எது மாறினாலும் பத்திரிகையின் பெயர், மொழி இவற்றுள் எதனை மாற்ற விரும்பினாலும் மீண்டும் புதிய மனுவை மாவட்ட நீதிபதியிடமோ நகரத் தலைமை நீதிபதியிடமோ அளிக்க வேண்டும். நாளிதழோ, வாரமிருமுறை, வாரமும்முறை இதழோ வெளியிடவேண்டிய படிகளின் எண்ணிக்கையில் பாதிக்குக் குறைவாக வெளியிட்டால் முன்பு அளித்த உறுதிமொழி செயலற்றுவிடும். இதழினைத் தொடர்ந்து வெளியிட எண்ணினால் நீதிபதியின் முன்னால் புதிய விண்ணப்பம் அளிக்க வேண்டும். ஓராண்டிற்கு மேல் ஒரு பத்திரிகை தொடர்ந்து வெளிவரவில்லையென்றால் அதற்குரிய அனுமதி ரத்து செய்யப்படும். மீண்டும் அந்தப் பத்திரிகை வெளிவரவேண்டுமானால் புதியதாக மனுச் செய்ய வேண்டும்.

**விபரக் குறிப்பு** Imprint Line

ஒவ்வொரு பத்திரிகையிலும் (இதழிலும்) இதழ்பற்றிய பதிப்பு விபரங்கள் அச்சிடப்பட வேண்டும். அச்சிடுபவர், உரிமையாளர், பதிப்பாசிரியர், அச்சிடும் இடம், வெளியாகும் இடம் ஆகிய விபரங்கள் கட்டாயமாக அச்சிடப்பட வேண்டும். இதனை Imprint line என்பர்.

**இதழ்களை அனுப்பும் முறை**

முதலில் அச்சிட்ட சில பிரதிகளை இணைத்துத் தபால் துறை அதிகாரிக்கு மனுச்செய்தால் அவர் கட்டண சலுகைக்கான அனுமதி தருவார். பின்னர் அவர் அளிக்கும் எண்ணைப் பின்புற அட்டையில் அச்சிட்டு சலுகை விலையில் தபாலில் அனுப்பலாம். ஆனால் பத்திரிகை அச்சிடும் அலுவலகத்திற்கு இந்த அனுமதியை அளிப்பதற்கு முன்னர் தபால் இலாகா அதிகாரிகளும் மேற்பார்வையிட வருவார்கள். ஒவ்வொரு வெளியீட்டிலும் ஒரு படியை 48 மணி நேரத்திற்குள் செய்தித்தாள்கள் பதிவாளருக்கோ அல்லது அங்கீகாரம் பெற்ற குறிப்பிட்ட அலுவலகங்களுக்கோ அனுப்ப வேண்டும். இந்தி, உருது, ஆங்கிலம், சமஸ்கிருதம் இரண்டு அல்லது பல மொழிகளில் அச்சிடும் இதழ்களின் படிகளைத் தில்லியிலுள்ள பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும், மற்ற மொழி இதழ்களைக் குறிப்பிட்ட பத்திரிகை செய்தி நிறுவனத்திற்கு (Press Information Bureau) அனுப்ப வேண்டும். எடுத்துக்காட்டாக, தமிழ்மொழி இதழ்களைச் சென்னையிலுள்ள அலுவலகத்திற்கும் தெலுங்கு இதழ்களை ஹைதராபாத்திலுள்ள அலுவலகத்திற்கும் மலையாள இதழ்களைத் திருவனந்தபுரத்திலுள்ள அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

முதல் இதழ் வெளியானவுடன் அதன்படியைத் தில்லியிலிருக்கும் ...த்திரிகைப் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கண்டோம். ...ல் இதழையும் மாவட்ட நீதிபதி அங்கீகரித்த உறுதி மொழி விண்ணப்பத்தின் ...லையும் பெற்ற பின்னர், பதிவாளர் அலுவலகத்தில் அந்த இதழைப் பற்றிக் ...றித்துக் கொண்டு அதற்கு ஒரு பதிவு செய்த எண்ணை (Registration) ...ங்குவார்கள். வெளியீட்டாருக்குப் பதிவுச் சான்றிதழும் வழங்குவர்.

## ...த்திரிகை அச்சிடும் தாளைப் பெறும்முறை

பத்திரிகை அச்சிடும் தாளை வெளி அங்காடியில் வாங்கினால் அதிக ...லை கொடுக்க வேண்டி இருக்கும். அரசின் கட்டுப்பாட்டு விலையில் பெற ...ண்டுமானால் பத்திரிகைப் பதிவாளருக்கு இரண்டு விண்ணப்பப் படிவங்க ...ளக் கீழ்க்கண்ட இடங்களிலிருந்து பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

1. இறக்குமதி, ஏற்றுமதி தலைமைக் கண்காணிப்பாளர் . டெல்லி
2. இந்தியப் பத்திரிகைப் பதிவாளர், டெல்லி
3. நிரந்தரமான இறக்குமதியாளர்கள்

அரசு நிர்ணயிக்கும் விலையில் கிடைக்கும் அச்சிடும் தாள், பொதுவாக ...ச்சிடும் தாள்ப் பங்கீட்டு முறையில் நிர்ணயம் செய்யப்படும். தாளின் பங்கீட்டு ...ளவு,

1) பத்திரிகையின் மொத்தப் பக்கங்கள்

2) பத்திரிகையின் நீள அகலம்

3) பத்திரிகையின் விற்பனை

4) தொடர்ச்சியாகப் பத்திரிகை வெளிவந்துள்ள தன்மை

5) வெளியீட்டின் கால அளவு

...லானவற்றின் அடிப்படையில் அமையும். எனவே மேற்கூறியுள்ள ...ரங்களையெல்லாம் விண்ணப்பத்தில் நிரப்ப வேண்டும். அடுத்த ஆண்டு ...சிடும் தாளுக்கு விண்ணப்பிக்கும்போது கடந்த ஆண்டின் வெளியீட்டைப் ...றுத்து இப்பங்கீடு மாறலாம். ஒவ்வோர் ஆண்டும் அச்சிடும் தாளின் நிர்ணய ...லையில் தாளைப் பெற பத்திரிகைப் படியினை பத்திரிகை வெளிவந்த 48 மணி ...த்திற்குள் பத்திரிகைப் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். ...த்திரிகை அனுப்புவதில் தடை ஏற்படுமாயின் அச்சிடும்தாளை மலிவு விலையில்

பெற முடியாது. 40 டன்களுக்கு மேல் ஒரு வெளியீட்டாளர் அச்சுத்தாளைப் பெற விரும்பினால் விண்ணப்பத்துடன் அதற்குரிய தொகை செலுத்திய கருவூலச் சிட்டையும் (Treasury Receipt) இணைத்து அனுப்ப வேண்டும்.

## அச்சு இயந்திரங்களைப் பெற விண்ணப்பித்தல்

அச்சு இயந்திரங்களை இறக்குமதி செய்ய விரும்புவோர் அதற்கு விண்ணப்பத்தினை டெல்லியில் உள்ள இறக்குமதி, ஏற்றுமதிக்கான தலைமைக் கண்காணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதன் உரிமையாளரோ வெளியீட்டாளரோ அச்சு இயந்திரங்களுக்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தாளில் இறக்குமதி செய்யும் அச்சுப் பொறிகளின் மதி வாங்கும் இடத்தின் பெயர், இதழின் பக்க அளவு, படிகளின் எண்ணிக்கை தங்களிடம் தற்போது இருக்கும் இயந்திரங்களைப் பற்றிய முழுவி முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும். ஏனெனில் செய்தித்தாளின் தேவை மதிப்பிட்டுத்தான் இயந்திரங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பர். ஆ ரூபாய்க்கு ஒரு ரூபாய் என்ற விகிதத்தில் கருவூலச் சிட்டு வாங்கி விண்ண தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

பெரும்பாலும் அச்சுப்பொறிகள் சோவியத்யூனியன், செக்கோஸ் வேகியா, மேற்கு ஜெர்மனி, ஹங்கேரி, இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுக இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அச்சுப் பொறிகளைப் பெறுவதற் தலைமைக் கண்காணிப்பாளரிடம் இந்தியப் பத்திரிகைப் பதிவாளர் சிப செய்யவேண்டும். பரிந்துரை செய்வதற்கு முன் இந்தியப் பத்திரிகைப் பதிவ அந்த விண்ணப்பதாரர் விரும்பும் அச்சுப் பொறிகளின் தேவை, பத்திரிகை விற்பனை அளவு, பொருளாதார வசதி எல்லாவற்றையும் கணித்தபின் பரிந்துரை வழங்குவார்.

## திட்டமிடுதல் :

மேற்கூறப்பட்ட எல்லாச் செயல்களையும் செய்து பத்திரிகை நடத்தினா தன் பத்திரிகையின் செயற்பாடுகள் குறித்து முன்னரே சற்று திட்டமி வேண்டும். பத்திரிகை நடத்துவது என்பது எளிதான ஒரு செயலன்று. துவக்கப் போகும் பத்திரிகை எவ்வகைப் பத்திரிகை என்று கணித்துக் கொ அவ்வகைப் பத்திரிகைகள் பற்றி ஒரு ஆய்வு நடத்த வேண்டும். அவை எவ்வ விற்பனையாகின்றன, அவற்றின் வெற்றிக்கு என்ன காரணம்? போன்றவற் வாசகர்களைப் பேட்டி கண்டு அறிய வேண்டும். தாம் துவங்கப்போகும் பத்திரி மார்க்கெட்டில் மற்ற பத்திரிகைகளுடன் போட்டி போட முடியுமா? என்பன

ார்க்க வேண்டும். அவ்வாறு போட்டிபோட என்ன சிறப்பு அம்சங்களைத்
த்திரிகை கொண்டிருக்க வேண்டும் என்று திட்டமிடவேண்டும். பதறாத காரி
தறாது என்றபடி முதலில் தன்பத்திரிகையின் துவக்கநிலையில் படிப்படிய
செல்ல வேண்டும். விளம்பர வருவாயைப் பெருக்கத் திட்டமிட வேண்
முதலில் மாதஇதழ் துவங்கி பின்னர் ஆதரவுக்கு எற்ப இருவார இதழ
வாரஇதழாக மாற்றலாம். துவக்கத்தில் பக்கங்களைக் குறைத்தே வெளி
வேண்டும். ஏனெனில் நாம் எதிர்பார்க்கும் தினசரிப்பத்திரிகை துவக்குவதான
பெரிய நிர்வாக அமைப்புடன் ஆரம்பிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மே
னது வாசகர்களின் ரசனைப் போக்கைப் புரிந்து அதற்கேற்ற செய்தியைத்
திட்டமிடவேண்டும்.

## இதழ்களின் நிர்வாகம்

பத்திரிகைகள் அன்றாடச் செய்திகளையும் அன்றாடப் பிரச்சினைகளை
கொண்டு வெளி வருகின்றன. நாள்தோறும் நாம் பார்க்கின்ற செய்தித்தாள்
அன்றன்று மலரும் புத்தம் பூக்கள். இன்றைய செய்தித்தாள் நாளை
கழிவுத்தாளாகிவிடுகிறது (To-day's newspaper, tomorrow's wastepap
இன்றைய செய்தி நாளைக்குப் பழைய செய்தியாகி விடும். என
செய்தித்தாள்களின் வாழ்வு ஒருநாள்தான். எனவே அந்த ஒருநாள் வாழ்வுக்கு
தகுதியையும், விரைவையும் செய்தித்தாள் பெற வேண்டும். நிர்வாகத்
சிறந்திருக்கின்ற ஒரு செய்தித்தாள் நிறுவனம்தான் தரமான செய்தித்தா
ரமுடியும். டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஆந்திரப் பிரபா, மலையாள மனோர
தினத்தந்தி போன்ற இதழ்களின் நிலைத்த விற்பனைக்கு அவற்றின் சிற
நிர்வாக அமைப்பே காரணம் எனலாம்.

டெலகஸ்,
நிறுவனங்களுக்கான உறுப்பினர் கட்டணம், தொலைபேசி, கேபிள், அயல்நாடு ஃபேக்ஸ் ஆகியவற்றிற்குக் கட்டணத் தொகை செலுத்தவேண்டும். அயல்நாடுகளில் செய்தியாளர்களைப் பணிக்கு அமர்த்தல் செலவு, பிற நிர்வாகச் செலவுகள் முதலியவற்றிற்குச் செலவழிக்கப் பணம் வேண்டும் என்பதால் இதழை ஆரம்பிப்பவர் முதலில் தனது பத்திரிகைக்கான பொருளாதார வசதியை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

செய்தித்தாள் அலுவலகத்தில் குறைந்தது 6 பிரிவுகள் செயல்படும்.

அவை :

1) நிர்வாகப் பகுதி (Administrative wing)

2) ஆசிரியர் குழு (Editorial wing)


3) இயந்திரப் பகுதி (Mechanical wing)

4) வணிகப் பகுதி (Business wing)

5) வளர்ச்சிப் பகுதி (Promotion section)

6) புள்ளிவிவரப் பகுதி (Data Processing Department)

முதலியன. இப் பிரிவுகளனைத்தும் திறம்படச் செயலாற்றினால்தான் பத்திரிகை தொடர்ந்து சிறப்பாக வெளிவரும். பொதுவாகப் பத்திரிகை அலுவலர்கள் வாணிபப்பகுதியை முன் அலுவலகம் (The front office) என்றும் இயந்திரப் பகுதியை பின் பணியறை (The Back Shop) என்றும் ஆசிரியர் பகுதியைச் செய்தி அறை (The news room) என்றும் அழைக்கின்றன. இந்த மூன்று பகுதிகளும் வேறுபட்ட பணிகளைச் செய்கின்றன. இம் மூன்று துறைகளும் ஒன்றையொன்று சார்ந்தும் இணைந்தும் செயல்படுவது அவசியமாகும். நாளிதழ் நிர்வாகத்தின் அமைப்ப முறையைப் பின்வரும் வரைபடம் விளங்குகிறது.


பொதுமேலாளர்
ஆசிரியப் பிரிவு
Editorial wing
வாணிபப் பிரிவு
Business
இயந்திரப் பிரிவு
Mechanical wing
வளர்ச்சிப் பிரிவு
புள்ளிவிவரப் பிரிவு
நிர்வாகப் பிரிவு
(1) செய்தி அறை
(2) படி எடுக்கும் பகுதி
(3) தலையங்கப் பகுதி
(4) படப் பகுதி
(5) நூலகம்
(1) விளம்பரப் பகுதி
(2) விற்பனைப் பகுதி
(3) கணக்குப் பகுதி
(1) அச்சுக் கோர்க்கும் பகுதி
(2) அமைப்புப் பகுதி
(3) படங்களைச் செதுக்கும் பகுதி
(4) அச்சடிக்கும் அறை
(5) திருத்தும் பகுதி

## 1) நிர்வாகப் பகுதி (Administrative wing)

செய்தித்தாள் உரிமை தனியாருடையதாக இருக்கலாம் அல்லது கூட்டுற அமைப்பைச் சார்ந்திருக்கலாம் அல்லது குறிப்பிட்ட அறக்கட்டளையைச் சேர்ந்ததாக இருக்கலாம். இப்பிரிவினை இதழின் உரிமையாளர் செயல்படுத்துவார். நிர்வாகத்தின் தலைவர் உரிமையாளர், பதிப்பாளர், என்று எந்தப்பெயரில் வேண்டுமானாலும் இயங்குவார். ஒவ்வொரு பகுதியின் பொறுப்பாளர்களாகத் தலைமை இதழாசிரியர், விற்பனை மேலாளர், விளம்பர மேலாளர், தலைமைக் கணக்கர் ஆகியோர் பொறுப்பேற்றுச் செயல்படுகின்றனர். இப்பல்வேறு துறையினரும் இதழின் கொள்கைகளின்படிச் செயல்படுகின்றனரா வென இந்தத்துறை கண்காணிக்கும். பொது மேலாளர் எல்லாப் பகுதிகளின் நிர்வாகத் தலைமையை ஏற்றிருக்கிறார். இவருடன் காசாளர், தணிக்கையாளர், கொள்வினையாளர் ஆகியோரும் நிர்வாகப் பகுதியில் பணியாற்றுகின்றனர்.

## 2) ஆசிரியர் குழு (Editorial wing)

செய்தித்தாள் படைப்புகளை ஆசிரியர் குழு முழுமைப்படுத்துகிற ஆசிரியர்/செய்தித் துறைதான் ஒரு நாளிதழின் இதயம் என்பார் எஸ்.டி.மேத்தா. ஒரு நாளேட்டின் தரமும் தனித் தன்மையும் அதன் ஆசிரியப் பகுதியைச் சார்ந்து அமைகிறது. இப்பகுதியின் பொறுப்பை ஆசிரியர் (Chief Editor) ஏற்பார். விளம்பரங்கள் தவிர செய்தித்தாளில் அச்சிடப்படும் எல்லாச் செய்திகளையும் இந்தப் பகுதிதான் தீர்மானிக்கிறது. செய்தி ஆசிரியர் (News Editor), துணை ஆசிரியர்கள் (Sub-Editors), செய்தி சேகரிக்கும் நிருபர்கள் (Reporters), அச்சுப்பிரதிதிருத்துநர் ( Proof Readers), ஓவியர், ஒளிப்படக் கலைஞர் முதலியவர்கள் இப்பிரிவில் பின்பற்றுகின்றனர். ஆசிரியர் குழு, செய்திப் பிரிவு, தலையங்கப் பிரிவு, கலைப்படைப்புப் பிரிவு என்று மூவகைப் பிரிவுகளாகப் இப்பகுதி செயல்படுகிறது.

## செய்திஅறை :

ஒரு செய்தித்தாளுக்கு வண்டிவண்டியாகச் செய்திகள் வந்து குவிகின்றன எனலாம். உள்ளூர்ச் செய்தியாளர்களும் சிறப்புச் செய்தியாளர்களும் நேரிலும் தந்திகள் மூலமும் செய்திகளை அனுப்புகின்றனர். செய்தி நிறுவனங்களிலிருந்தும் (News Agencies) செய்திகள் வருகின்றன. அரசின் பல்வேறு துறைகளும் தனியார் நிறுவனங்களும் தாங்களே முன்வந்து தம்மைப் பற்றிய செய்திகளை அளிக்கின்றன. உள்ளூர்ச் செய்திகள், வட்டாரச் செய்திகள், மாநில

செய்திகள், தேசியச் செய்திகள், உலகச் செய்திகள் என்று பல்வேறு செய்திகள் வந்து குவியும் அறை இது. வருகின்ற செய்திகளைப் பெற்று வகைப்படுத்திச் செய்திகளைச் செப்பனிட்டு உருவாக்கும் அறைக்கு இங்கிருந்து அனுப்புவர்.

படி எடுக்கும் பகுதி ( Copy Desk):

செய்திகளைச் செப்பனிட்டு உருவாக்கும் இப்பகுதியை செய்தி மேஜை (News Desk) என்பர். இப்பகுதியில் செய்தியாசிரியரும் அவருக்குத் துணை செய்கின்ற எழுத்தாளர்களும் பணியாற்றுகின்றனர். ஒரு நாளிதழ் அலுவலகத்திற்கு வந்து சேருகின்ற எல்லாச் செய்திகளையும் வெளியிட இயலாது என்பதால் அவற்றுள் எவற்றைத் தெரிந்தெடுப்பது என்பது முக்கியம். அவ்வாறு தெரிந்தெடுத்து, வகைப்படுத்தி, பதிப்பத்து வெளியிடும் வகையில் செய்தியை எழுதும் பணியை (உருவாக்கும் பணியை) இத்துறை விரைந்து செய்கிறது.

இப்பகுதியில்தான் செய்தியைப் பதிப்பித்தல் (Editing), அதற்கு ஒரு சரியான தலைப்பினைத் (Head Line ) தருதல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

செய்திப்படியை வாசித்து இறுதி உருவம் கொடுப்பவரைச் செய்திப்படி வாசிப்பாளர் (Copy Reader) என்பர். இவர் ஒரு செய்தியை அச்சுக்கு அனுப்புவதற்கு முன் அச் செய்தி செய்திமதிப்பு (News value ) உடையதுதானா? அது சரியான செய்திதானா? போன்றவற்றைக் கவனிக்க வேண்டும். அதோடு செய்தி தெளிவாக, சுருக்கமாக, எளிமையாக, நல்ல மொழிநடையில் எழுதப்பட்டிருக்கிறது. என்பதையும் செய்தி அமைப்பின் செம்மையையும் கவனிக்கவேண்டும்.

இதழின் தலையங்கப்பகுதியை எழுதுவது இதழ் ஆசிரியர் பணிதான். தலையங்கம் எழுதுகின்றவர் காலத்தேவை எது என்பதைத் தீர்மானித்துத் தங்களது கொள்கையின் அடிப்படையில் தலையங்கம் எழுத வேண்டும். தலையங்கம் நடுநிலையுடன் ஆராய்ந்து தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

படப்பகுதியில் பணிபுரிபவர்கள் ஆசிரியர் குறிப்பிடுகின்றபடி சிறப்பளிக்கும் புகைப்படங்களை எடுத்து கொண்டு வந்து தருவர்.

மோர்கு ('Morgue') என்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடப்படும் நூலகத்தில் இதழியலாளர்களுக்குத் தேவையான பல்வேறு நூல்கள், வரலாற்றுக் குறிப்புகள், கலைக்களஞ்சியங்கள், படங்கள், பழைய செய்தித்தாள் குறிப்புகள் முதலியன தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். தலைவர்களின்

வாழ்க்கைச் குறிப்புகள் ஏற்கனவே இங்கு கோப்புகளில் தொகுக்கப்
வைக்கப்பட்டிருக்கும். எல்லாக்குறிப்பும் இங்கு தேடினால் கிடைக்கும்.

### 3) இயந்திரப்பகுதி :

ஆசிரியர் குழுவினால் பதிப்பிக்கப்பட்ட செய்திகள் மானோ அல்
லைனோ மிஷின்களில் அச்சுக் கோர்க்கப்படுவதற்காக இயந்திரப் பகுதி
அனுப்பப்படும். இப்பொழுது ஆங்கில நாளிதழ்களில் கணிப்பொறி வழி
அச்சுக் கோர்க்கும் முறை, போட்டோ கம்போஸிங் என்ற அதி நவீன இயந்திர
அச்சிடு முறை பயன்படுத்தப்படுகிறது.

இந்த மிஷின்களில் டைப்ரைடிங் இயந்திரத்தில் உள்ளது போ
எழுத்துக்கள் வரிசை இருக்கும். அதில் டைப் அடிப்பது போலச் செய்தி
அடித்தால் அச்சடிக்கப்படும். பின்னர் தலைப்புப் அச்சடிக்கப்பட்டு பிரு
எடுக்கப்படும். இந்தப் பிழைதிருத்தப் பிரதியையும் முதலில் அனுப்பப்
செய்திப்படியையும் ஒப்பிட்டுப் பார்த்து பிழைகளைத்திருத்துவது பிழைதிருத்
பணியாளரின் பணி.

போட்டோகம்போஸிங் முறையில் கிட்டத்தட்ட புகைப்படத்தில் கிடைக்
'நெகடிவ்' போன்று நாளிதழின் பக்கம் கிடைக்கும். அதைக் கொண்டு பக்
தயார் செய்வார்கள்.

இந்த நவீன முறை இன்னும் கையாளப் படாத தமிழ்ப் பத்திரிகைகள்
அச்சுக் கோர்த்த செய்திகளை அச்சகங்களில் பக்கம் கட்டுவது போல ( pa
makeup) பக்கம் கட்டுவார்கள். இவ்வாறு பக்கங்கள் தயாராகும் இடம் ஸ்டோ
(stone ) என்று அழைக்கப்படும், பக்கம் கட்டுவதும் ஒரு தனிக்கலை ஆகும்.

### 4) வணிகப் பகுதி ( Business wing)

வணிகப் பகுதி பொது அலுவலகம், விற்பனை, விளம்பரம் ஆகிய மூன்
பகுதிகளாகக் கொண்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு மேலாளர் இருப்பா
விளம்பரப்பிரிவில் பெரிய விளம்பரப் பகுதி, சிறிய விளம்பரப் பகுதி என இரண்
பிரிவாகச் செயல்படும் முறையும் விற்பனைப் பிரிவில் உள்ளூர் விற்பனை
வட்டார விற்பனை,, அஞ்சல்வழி விற்பனை எனத் தனித்தனிப்பிரிவுகள் உண்
தலைமை எழுத்தர், விளம்பர மேலாளர், விற்பனை மேலாளர் ஆகியோரி
பணிகளால்தான் செய்தித்தாள் நிலைத்து நிற்கமுடியும்.

விற்பனையும், விளம்பரங்களும் இல்லையெனில் பத்திரிகையின் ஓட்
தடைப்பட்டுவிடும். விளம்பரங்களே இதழ்களின் வளத்திற்கு உறுதுணை

கின்றன என்றாலும் இதழின் விற்பனைப் பெருக்கமும் அவசியம். அதுவே இதழுக்கு மதிப்பைத் தேடித்தரும். இதழில் விளம்பரம் செய்ய முன்வருவோர் அவ்விதழின் விற்பனை எண்ணிக்கை, விற்பனையாகும் பகுதி, அப்பகுதியின் மக்கள்தொகை பத்திரிகையின் விரைவான விநியோகம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டே விளம்பரம் செய்ய முன்வருவர். எனவே விற்பனைப்பிரிவின் செயற்பாடு மிக முக்கியமானது.

இவ்விற்பனைப்பிரிவு இரண்டு வகையான செயல்களைச் செய்கிறது. அவை.

1) இதழ்களைப் பரப்புதல் (Distribution)

2) விற்பனைப் பெருக்கம் (Sales Promotion)

முகவர்களை அமர்த்தி உள்ளூரில் பத்திரிகைப் பரப்பு நடைபெறுகிறது. போக்குவரத்து வசதிகளைப் பொறுத்து மாநில அளவில் பரப்பப்படுகிறது. சில ஊர்களுக்குத்தம் சொந்த வண்டிகளில் இதழ்களை அனுப்புகின்றனர். நாடு தழுவிய பரப்பலில் தலைநகரில் அல்லது பிறநாடுகளில் உள்ள முகவர்களுக்கு விமானங்கள் மூலம் இதழ்கள் அனுப்பப்படும். அஞ்சல் வழிப்பரப்புதல் மிகுதியான வேலை கொண்ட பணியாகும். இதழ்களை மடித்து ஒட்டி, முகவரி எழுதி ஊர்தியில் ஏற்றி உரிய இடத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிறஇதழ்களின் போட்டி, விலையேற்றம், இதழ்களின் கொள்கை, அச்சு முறை, பொருளடக்கம் போன்றவை விற்பனையில் சரிவு ஏற்படக் காரணங்களாவதுண்டு. இவற்றுள் எது எந்த நேரத்தில் விற்பனையைப் பாதிக்கிறது என்பதை அறிந்து விற்பனை மேலாளர் சரிப்படுத்த முயலவேண்டும். விற்பனையில் சரிவு ஏற்பட்டால் தம் இதழ் பற்றி விளம்பரம் செய்ய வேண்டும். வாசகர்களுக்குப் பரிசுத் திட்டங்களை அறிவித்து விற்பனையைப் பெருக்கலாம். இணைப்பு இதழ்களைச் சேர்த்து வழங்கியும் விற்பனையைப் பெருக்கலாம். வணிகப் பகுதியில் உள்ள கணக்குப்பகுதி (Accounting Division) நாளேட்டின் எல்லாக் கணக்குகளையும் பதிவு செய்து வைக்கிறது. கணக்குத் தணிக்கையும் (Auditing) இப்பகுதியில் அடங்கும்.

## 5) வளர்ச்சிப் பகுதி (Promotion Section)

நாளிதழ்களின் வளர்ச்சியைக் கவனிக்கத் தனித்துறை செயல்படுகிறது. விளம்பரங்கள் மூலம் தம் இதழ் வெளிவருதை மக்களுக்கு அறிவித்து, தம் இதழ்களின் சிறப்புப் பகுதியை மக்களுக்கு எடுத்துவைத்து வாசகர்களின் கவனத்தைப் பெறுவதன் மூலம் தம் இதழின் வளர்ச்சியைப் பெருக்கும் இத்துறை.

### 6) புள்ளிவிவரப்பகுதி (Data Processing Department)

இதழினைப் பற்றிய எல்லா விபரங்களையும் சேர்த்து வைப்பது இதழின் வளர்ச்சிக்குத் துணை செய்யும். எனவே தற்காலத்தில் பெரிய நாளிதழ்களில் கணிப்பொறியின் துணையுடன் தம் இதழ்பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து வகைப்படுத்தி வைக்கின்றனர்.

இதழின் உருவாக்கத்தில் செய்தித்தாளுக்கான செய்திகளைச் சேர்த்தல் அவற்றை அச்சுக் கோர்த்தல், சரியான செய்தியைச் சரியான நேரத்தில் பிற இதழ்களைவிட முந்தி வெளியிடுதல், நன்முறையில் செய்திகளை ஆசிரியர் பதிப்பித்தல், சிறப்பான தலையங்கங்கள் எழுதுதல், கவர்ச்சியான தலைப்புகளைக் கொடுத்து மக்களைக் கவர்தல், இதழின் பக்க அமைப்பைச் சிறப்புற அமைத்து வாசகர்களை ஈர்த்தல், விளம்பரங்களின் மூலம் வருவாயைப் பெருக்கல், தொடர்ந்து தம் இதழின் வளர்ச்சியைப் பேணல் ஆகிய அனைத்துமே மிகவும் முக்கியமான செயற்பாடுகள் ஆவன.